# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அறிமுகம் | 02 |
| | பணியாட் தொகுதி விபரம் | 03 |
| | திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு | 04 |
| 1. | நிருவாகப் பிரிவு | 05 |
| 1:1 | நிருவாகக் கிளை | 05 |
| 1:2 | பயிற்சி மற்றும் அபிவிருத்தி கிளை | 05 |
| 1:3 | கொள்முதல் கிளை | 08 |
| 2. | கடவுச்சீட்டுப் பிரிவு | 10 |
| 2:1 | கடவுச்சீட்டுக் கிளை | 10 |
| 2:2 | கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை | 12 |
| 2:3 | கடவுச்சீட்டு திருத்தக் கிளை | 13 |
| 2:4 | வெளிநாட்டு தூதரகக் கிளை | 15 |
| 2:5 | தபால் கிளை | 17 |
| 3. | கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு | 18 |
| 3:1 | கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை | 18 |
| 3:2 | இந்திய - இலங்கை பிரஜைகள் கிளை | 20 |
| 3:3 | சட்டக் கிளை | 21 |
| 4. | வீசா மற்றும்எல்லைக்கட்டுப்பாட்டுப்பிரிவு | 23 |
| 4:1 | வீசா கிளை | 23 |
| 4:2 | துறைமுகக் கிளை | 27 |
| 4:3 | விசாரணைக் கிளை | 34 |
| 5. | தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 36 |
| 6. | கணக்கீட்டுப் பிரிவு | 38 |
| 7. | பிரஜாவுரிமைப் பிரிவு | 41 |
| 8. | உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு | 44 |
| 9. | நலனோம்புகை நடவடிக்கைகள் | 46 |

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

**செயலாற்றுகை அறிக்கை - 2016**

**அறிமுகம்:**

**1948** ஆம் ஆண்டின் **20** ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்ட த்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பத்தைக் கட்டுப்படுத்தல், இலங்கைப் பிரஜைகள் அல்லாத ஏனைய பிரசைகளும், நபர்களும் இலங்கையிலிருந்து வெளியேறுவதை ஒழுங்குமுறைப்படுத்தல், இலங்கைப் பிரஜைகள் அல்லாத விரும்பத்தகாத நபர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல் முதலான நடவடிக்கைகளை எடுக்கும் தத்துவம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுகளை விநியோகித்தல், வெளிநாடுகளில் பிறக்கும் இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந் நாட்டுக் குடியுரிமையை வழங்குதல், இலங்கைக் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் இலங்கையர் அல்லாதோருக்கு இந் நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் முதலான பணிகளும் இத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

**நோக்கு**

பிராந்தியத்தில் முன்னோடி குடிவரவு, குடியகல்வு சேவையாகத் திகழுதல்

**செயற்பணி**

தேசிய பாதுகாப்பையும், சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்தலும், பொருளாதார அபிவிருத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திய வண்ணம் நாட்டிலிருந்து வெளியேறு வோரையும் நாட்டிற்குள் வருவோரையும் ஒழுங்குமுறைப்படுத்துதலும், பிரஜைகள் சேவைகளை வழங்குதலும்.

**பணிகள்**

- இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுகளை விநியோகித்தலும், அதனோடிணைந்த பணிகளும்.
- வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தலும், அதனோடிணைந்த பணிகளும்.
- இரட்டைக் குடியுரிமையை வழங்குவதுடன் தொடர்புடைய பணிகள்.
- எல்லைக் கட்டுப்பாடு.
- பொதுவான நிருவாகமும், நிதி நிருவாக நடவடிக்கைளும்

**சட்டத் தத்துவங்கள்**

- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.
- **1948** ஆம் ஆண்டின்**18** ஆம் இலக்க பிரஜாவுரிமை சட்டம்.
- **1948** ஆம் ஆண்டின்**20** ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்.
- **1949** ஆம் ஆண்டி ன்**3** ஆம் இலக்க இந்திய, பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம்.

- 1956குடிவருவோர், குடியகல்வோர் ஒழுங்குவிதிகளும் தொடர்புடைய திருத்தங்களும்.
- 1967 ஆம் ஆண்டி ன்14 ஆம் இலக்க இந்திய - இலங்கை உடன்படிக்கையை (சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை) நடைமுறைப்படுத்துவதற்கான சட்டம்.
- 1988 ஆம் ஆண்டின்39 ஆம் இலக்க பதிலாள்களுக்குபிரஜாவுரிமை வழங்குவதற்கானசட்டம்.
- 2003 ஆம் ஆண்டின்35 ஆம் இலக்க இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்
- மேற்சொன்ன சட்டங்களுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளும், கட்டளைகளும்.
- குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளும், அறிவுறுத்தல்களும்.

## நிருவாகம்


### 1. பணியாட் தொகுதி விபரம்

திணைக்களத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையிலும், கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையிலும் திணைக்களத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திடம் உரித்தாக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் வழிநடாத்தலினதும், மேற்பார்வையினதும் கீழ் மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம், 05 கட்டுப்பாட்டாளர்கள், பிரதம கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் திணைக்களத்தின் அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்றனர்.

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட் தொகுதி விபரம் - 2016**

| | பதவி | சேவை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | நிலவும் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டுப்பாட்டாளர் நாயகம் | இல.நி.சே. (விசேட தரம்) | 01 | 01 | - |
| 2. | மேலதிக கட்டுப்பாட்டாளர் நாயகம் | இல.நி.சே. (விசேட தரம்) | 01 | 01 | - |
| 3. | கட்டுப்பாட்டாளர் | இல.நி.சே. | 05 | 05 | - |
| 4. | பிரதம கணக்காளர் | இல.க.சே. | 01 | 01 | - |
| 5. | பிரதி/ உதவிக் கட்டுப்பாட்டாளர் | இல.நி.சே. | 39 | 33 | 06 |
| 6. | பிரதி/ உதவிக் கட்டுப்பாட்டாளர் | திணைக்கள | 10 | 07 | 03 |
| 7. | கணக்காளர் | இல.க.சே. | 02 | 02 | - |
| 8. | உள்ளகக் கணக்காய்வாளர் | இல.க.சே. | 01 | 01 | - |
| 9. | நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே. | 02 | 02 | - |
| 10. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | திணைக்கள | 36 | 14 | 22 |
| 11. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | திணைக்கள | 358 | 331 | 27 |
| 12. | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 | 02 | - |
| 13. | பயிற்சி முகாமையாளர் | இணைந்த சேவை | 01 | 01 | - |
| 14. | வரவு - செலவுத் திட்ட உதவியாளர் | இணைந்த சேவை | 01 | 01 | - |
| 15. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தி உ. சேவை | 20 | 20 | - |
| 16. | காவலாளர் | திணைக்கள | 03 | 03 | - |
| 17. | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. | 368 | 368 | - |
| 18. | வரவேற்பு உத்தியோகத்தர் | திணைக்கள | 01 | 01 | - |
| 19. | கடவுச்சீட்டு உதவியாளர் | திணைக்கள | 35 | 31 | 04 |
| 20. | சாரதி | சாரதி சேவை | 30 | 30 | - |
| 21. | அலுவலக உதவியாளர் | அ.உ.சே. | 104 | 103 | 01 |
| 22. | அமய சிற்றூழியர் | அமய | 10 | 05 | 05 |
| | **மொத்தம்** | | **1,031** | **963** | **68** |

# குடிவரவு, குடியகல்வுத் திணைகளத்தின் நிறுவனக் கட்டமைப்பு



## 1. நிருவாகப் பிரிவு

இப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (நிருவாகம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குவதுடன், பொதுவான நிருவாகம். பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி, கொள்முதல் முதலான பணிகள் இப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்றன.

### 1:1 நிருவாகக் கிளை

**பணியாட் தொகுதி**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 2. | நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| 3. | மொழிபெயர்ப்பாளர் | 02 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 27 |
| 5. | சாரதி | 30 |
| 6. | அலுவலக உதவியாளர் | 04 |
| 7. | சிற்றூழியர் | 05 |

**தாபன நடவடிக்கைகள்**

**ஆட்சேர்ப்புகளும், பதவியுயர்வுகளும்**

| | பதவி | எண்ணிக்கை | பதவியுயர்த்தப்பட்ட பதவி |
|---|---|---|---|
| 1. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 | உதவிக் கட்டுப்பாட்டாளர் (2016.06.13) |
| 2. | அரச முகாமைத்துவ உதவியாளர்I | 06 | அ.மு.உ.சே. அதியுயர் வகுப்பு |
| 3. | அரச முகாமைத்துவ உதவியாளர் II | 02 | அ.மு.உ.சே. I |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் III | 25 | அ.மு.உ.சே. II |

**சேவையில் நிரந்தரமாக்கல்**

அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் IIIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் -03

**வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்துதல்**

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான 2016 ஆம் வருடத்திற்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2017.03.19ஆம் திகதி நடாத்தப்பட்டது.

**இடமாற்றங்களும், ஓய்வுபெறலும் - 2016**

| | பதவி | இடமாற்றம் பெற்று வந்தோர் | இடமாற்றம் பெற்றுச் சென்றோர் | ஓய்வு பெற்றுச் சென்றோர் |
|---|---|---|---|---|
| 1. | இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் | 08 | 12 | - |
| 2. | உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) | - | - | 02 |
| 3. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | - | - | 02 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 98 | 50 | 11 |
| 5. | அலுவலக உதவியாளர் சேவை | 13 | - | 03 |
| 6. | சாரதி சேவை | 03 | - | 01 |

**ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

- ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை - 05
- முடிக்கப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை - 01
- ஆரம்பிக்கப்பட்டுள்ள முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை - 00
- முடிக்கப்பட்டுள்ள முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை - 00
- வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 01
- பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 00

**1:2 பயிற்சி மற்றும் அபிவிருத்தி கிளை**

கட்டுப்பாட்டாளர் (நிருவாகம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பயிற்சி முகாமையாளர் | 01 |
| 2. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| 3. | அலுவலக உதவியாளர் | 01 |

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள எல்லா உத்தியோகத்தர்களினதும் பயிற்சித் தேவைகளை இனங் கண்டு, பொருத்தமான மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை,

- திட்டமிடுதல்.
- ஒழுங்கு செய்தல்.
- அமுல் செய்தல்.
- ஏனைய செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகளை இனங் கண்டு, அவற்றிற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, வெளி நிறுவனங்கள், தூதரகங்கள், சர்வதேச அமைப்புகள் ஊடாக பணியாட் தொகுதிக்கான பயிற்சி வாய்ப்புகளை இனங் கண்டு, அவற்றுடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுதல்.

**2016 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்**

| | பயிற்சி நிகழ்ச்சி/ செயலமர்வு | நடாத்தப்பட்ட திகதி | இலக்கு வைக்கப்பட்ட குழு | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | புதிய உத்தியோகத்தர்களுக்கான ஆரம்பப் பயிற்சிச் செயலமர்வு (பயிற்சி, அபிவிருத்திப் பிரிவு கேட்போர் கூடம்) | 2016.01.04 2016.01.08 | பதவிநிலை உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள். | 40 |
| 2. | உயிர்மானக் கடவுச்சீட்டுகள் கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடும் செயலமர்வு | 2016.01.23 | பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 24 |
| 3. | விளையாட்டுத்துறை மற்றும் உடல் ஆரோக்கிய விசேட நிகழ்ச்சித் திட்டத்தை அமுல் செய்தல். விளையாட்டு, உடற் பயிற்சி தொடர்பில் பயிற்சிகளை செய்து காட்டல் (பயிற்சி, அபிவிருத்திப் பிரிவு கேட்போர் கூடம்) | 2016.01.25 | திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் | 300 |
| 4. | Training program on finger print feature identification and ICAO photo standard compliance. | 2016.02.10 | இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களும். | 30 |
| 5. | Workshop on Readmission (Hotel Renuka) | 2016.02.17 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 17 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | Case Management System RCMS (Hotel Renuka) | 2016.02.24 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 17 |
| 7. | கைசென் முகாமைத்துவம் தொடர்பில் தெளிவூட்டல் செயலமர்வு (பயிற்சி, அபிவிருத்திப் பிரிவு கேட்போர் கூடம்) | 2016.03.03 | உதவிக் கட்டுப்பாட்டாளர், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் | 50 |
| 8. | குடிவரவு, குடியகல்வு சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்குமான ஆவணங்களைப் பரீட்சிப்பது தொடர்பில் பயிற்சிச் செயலமர்வு (பயிற்சி, அபிவிருத்திப் பிரிவு கேட்போர் கூடம்) | 2016.03.09 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களும், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களும். | 26 |
| 9. | கடவுச்சீட்டுப் பிரிவின் கடமை நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட செயலமர்வு. (அபேகம வளவு) | 2016.03.19 | பிரதிக் கட்டுப்பாட்டாளர்கள், உதவிக் கட்டுப்பாட்டாளர்கள். | 35 |
| 10. | இலஞ்சம் அல்லது ஊழல் நிவாரணம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி. (கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா விமான நிலைய ஓய்வறை கேட்போர் கூடம்) | 2016.04.05<br>2016.04.08 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 85 |
| 11. | புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு | 2016.04.26<br>2016.04.29 | அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் | 25 |
| 12. | நேர்மறை சிந்தனை, எல்லைக் கட்டுப்பாடு, வீசா நடவடிக்கைகள், இரட்டைக் குடியுரிமை ஆகிய விடயங்கள் தொடர்பில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு (இலங்கை மன்றக் கல்லூரி) | 2016.04.30 | பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 50 |
| 13. | அரச ஆவண முகாமை, பாதுகாத்தல், பேணிப் பாதுகாத்தல், பொறுப்பு நீக்கம் செய்தல் தொடர்பான செயலமர்வு | 2016.05.11 | பதவிநிலை உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள். | 60 |
| 14. | உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சி | 2016.06.09 | பதவிநிலை உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள். | 40 |
| 15. | உற்பத்தித் திறன் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (12 நாள்) | 2016.06.14<br>2016.09.06 | அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள். | 03 |
| 16. | போதைப் பொருள், சிகரட் பாவனையின் மோசமான பாதிப்புகளும், சமூகத் தாக்கங்களும்- புற்றுநோய் தொடர்பான செயலமர்வு (முன்னரங்கு வளவு) | 2016.06.20 | உத்தியோகத்தர்கள் அனைவரும். | 80 |
| 17. | உற்பத்தித் திறன் நிகழ்ச்சித் திட்டம் | 2016.06.22 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள். | 20 |
| 18. | பொது மக்கள் தொடர்பு மற்றும் தலைமைத்துவம் தொடர்பான செயலமர்வு. (இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) | 2016.07.08 | பதவிநிலை உத்தியோகத்தர்கள். | 45 |
| 19. | இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான நிவாரணம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி. (கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா விமான நிலைய ஓய்வறை கேட்போர் கூடம்) | 2016.07.13 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 85 |
| 20. | நிருவாக ரீதியான ஒழுங்குவிதிகளும், அவற்றின் நடைமுறைப் பயன்பாடும் - சவால்களும், அவதானங்களும் (ரேணுகா ஹோட்டல்). | 2016.07.25 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 25 |
| 21. | Strengthening the government capacity to combat human smuggling & other cross border crimes in Sri Lanka. (Hotel Renuka). | 2016.07.26<br>2016.08.05 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 25 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | Travel documents<br>(Training and development unit) | 2016.07.27<br>2016.08.03 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 25 |
| 23. | Inland Immigration Enforcement<br>(Hotel Renuka) | 2016.07.29<br>2016.08.05 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 20 |
| 24. | Finger Print Science | 2016.10.28 | பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 15 |
| 25. | தர வட்டங்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டுக் கருவிகள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு | 2016.11.01 | பதவிநிலை உத்தியோகத்தர்கள், அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள். | 35 |
| 26. | Investigation of Narcotics<br>(Department of Immigration & Emigration) | 2016.11.09 | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 20 |
| 27. | 2016.05.15 ஆம் திகதிக்குப் பின்னர் இடமாற்றம் பெற்று திணைக்களத்திற்கு வந்த புதிய உத்தியோகத்தர்களுக்கான ஆரம்பப் பயிற்சிச் செயலமர்வு | 2016.11.10<br>2016.11.11 | அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் | 15 |
| 28. | கனேடிய தூதுவராலய உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் செயலமர்வு | 2016.11.28<br>2016.12.09 | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 15 |
| 29. | Visa and Boarder Management Formalities/ Procedures and operations.<br>(Excel of Distance Learning Centre) | 2016.12.02 | நிறைவேற்று (பதவிநிலை) உத்தியோகத்தர்கள். | 45 |
| 30. | எல்லைக் கட்டுப்பாட்டு மற்றும் வீசா நடவடிக்கைகள் தொடர்பான விசேட செயலமர்வு.<br>(இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) | 2016.12.03 | பதவிநிலை உத்தியோகத்தர்கள். | 50 |
| 31. | Outbound Training<br>Outside Colombo – Canadian Council | 2016.12.05<br>2016.12.09 | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 25 |
| 32. | எல்லைக் கட்டுப்பாட்டு மற்றும் வீசா நடவடிக்கைகள் தொடர்பான விசேட செயலமர்வு. - கட்டுநாயக்கா பண்டாரநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றுதல் தொடர்பில் குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டும் செயலமர்வு. | 2016.12.10 | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள். | 20 |
| 33. | கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் புதிய நடைமுறையின் முன்னேற்றம் - நிருவாக நடவடிக்கைகளை இற்றைப்படுத்தல். | 2016.12.17<br>2016.12.18 | பிராந்திய அலுவலகங்களைச் சேர்ந்த எல்லா உத்தியோகத்தர்களும். | 60 |

### 1:3 கொள்முதல் கிளை

**2016 ஆம் வருடத்திற்கான கொள்முதல் திட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம்:**

| | கொள்முதல் செய்யப்பட்ட பொருள் | பெறுமதி (ரூ.) |
|---|---|---|
| 1. | அலுவலக உபகரணங்களும், தளபாடங்களும் | 42,530,154.23 |
| 2. | அச்சு இயந்திரங்களும், நிழற்பட இயந்திரங்களும் | 1,340,192.00 |
| 3. | கணினி முறைமைக்குரிய உபகரணங்கள | 122,223,977.73 |
| 4. | ஸ்கேனர் இயந்திரங்கள் | 1,058,400.00 |
| 5. | வெற்றுக் கடவுச்சீட்டுகளும், கடவுச்சீட்டு அச்சுப் பணிகளுக்கான சாயமும் | 549,176,629.39 |
| 6. | கட்டிடங்களை நிர்மாணித்தலும், புதிதாக பகுதிகளைச் சேர்த்தலும் | 86,769,383.05 |
| 7. | வீசா ஸ்ரிக்கர்கள் | 13,423,375.00 |
| 8. | வைபவங்களும், பிற ஏற்பாடுகளும் | 8,899,413.70 |
| 9. | ஆவணங்களை வருடி எடுத்தல் (ஸ்கேன் செய்தல்) | 1,689,120.00 |
| | **மொத்தம்** | **827,110,645.10** |

**விசேட பணிகள்**

**1. பணியாட் தொகுதியினரை ஊக்கப்படுத்தல்**

திணைக்களப் பணியாட் தொகுதியினரை ஊக்கப்படுத்தும் நடவடிக்கையாக **2016** ஆம் வருடத்தில் காண்பித்த செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு, மிகச் சிறந்த உத்தியோகத்தர்களுக்காக சான்றிதழ்கள், பாராட்டுதல்கள், பரிசுகள் என்பன வழங்கப்பட்டன. இங்கு பரிசில்களை வழங்குவதற்காக திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தின் அனுசரணை பெற்றுக் கொள்ளப்பட்டது. அந்தந்த சேவை வகுதிகளுக்கு அமைய மிகச் சிறந்த உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வருமாறு:

| | **சேவை வகுதி/ பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 2. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 06 |
| 3. | கடவுச்சீட்டு உதவியாளர் | 02 |
| 4. | முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| 5. | அலுவலக உதவியாளர் | 04 |
| 6. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 7. | சாரதி | 01 |

**2. திணைக்களத்தை புதிய கட்டிடத்தில் நிறுவுதல்**

இத் திணைக்களமானது, ஆனந்த இராஜகருணா மாவத்தை, இல. **41** இல் அமைந்துள்ள தனியார் கம்பனியொன்றிற்குச் சொந்தமான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்பட்டதுடன், **2016.08.29**ஆம் திகதி இத் திணைக்களம், பத்தரமுல்லை "சுகுறுபாயா" கட்டிடத் தொகுதியில் நிறுவப்பட்டது. இதன் போது "சுகுறுபாயா" புதிய கட்டிடத்தில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தை நிறுவுதல் தொடக்கம் ஏற்கனவே இருந்த சேவை நிலையம் அமையப் பெற்றிருந்த கட்டிடத்தை கட்டிட உரிமையாளரிடம் ஒப்படைத்தல் வரை, பாரிய பணிகள் அன்றாட கடமைகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டன. தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி முறைமையொன்றினூடாக அன்றாட சேவைகளை வழங்கும் இத் திணைக்களத்தை புதிய கட்டிடத் தொகுதியொன்றினுள் நிறுவுவதென்பது சவால் நிறைந்த பணியொன்றாக இருந்த போதிலும், ஒரேயொரு அரசாங்க வேலை நாளில் மட்டும் அலுவலகத்தை மூடி, புதிய கட்டிடத் தொகுதியில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தை நிறுவும் நடவடிக்கைகள் எல்லா உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும், ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட்டது.

**3. வேலை ஆய்வொன்றை மேற்கொள்ளல்**

திணைக்களப் பணிகளின் விரிவாக்கம் மற்றும் புதிய பணிகள் வந்து சேரும் போக்கினுள் மனித வளப் பயன்பாட்டின் தன்மையை ஆய்வு செய்து, தேவையான மீளமைப்புகளை மேற்கொள்ளும் நோக்குடன் வேலை ஆய்வொன்றை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 2. கடவுச்சீட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் பிரதானமாக கடவுச்சீட்டுக் கிளை, கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை, கடவுச்சீட்டு திருத்தக் கிளை, வெளிநாட்டுத் தூதரகக் கிளை, தபால் கிளை ஆகிய கிளைகள் இயங்குகின்றன.

### 2:1 கடவுச்சீட்டுக் கிளை

இத் திணைக்களத்தின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் கூடுதலாக வருகை தரும் கிளை கடவுச்சீட்டுக் கிளை என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சுற்றுலா, மருத்துவச் சிகிச்சை, யாத்திரை முதலான பல்வேறு தேவைகளுக்காகவும் வெளிநாடு செல்லும் நோக்கில் கடவுச்சீட்டுகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் மிகச் சரியான தகவல்கள் அடங்கியதுமான கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் இப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது. இங்கு பிரதான அலுவலகத்தின் கடவுச்சீட்டுக் கிளைக்கு மேலதிகமாக, கண்டி, வவுனியா, மாத்தறை ஆகிய இடங்களில் 03 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் வருடத்திலிருந்து பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் முறை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 16 |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 07 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 56 |
| 3. | அலுவலக உதவியாளர் | 18 |

**கடவுச்சீட்டுப் பிரிவின் நோக்கங்கள்**

வெளிநாட்டு வேலை வாய்ப்பு, வெளிநாட்டு சுற்றுப் பயணம், மருத்துவ சிகிச்சை போன்ற பல்வேறுபட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, கடவுச்சீட்டிற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற மிகச் சரியான தகவல்கள் அடங்கிய கடவுச்சீட்டுகளை விநியோகித்தல்.

**பணிகள்**

சேவை பெறுனர்களாக இருக்கும் மக்களின் உச்ச வசதிகள் தொடர்பில் கூருணர்வுடன் செயற்பட்டு, வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கு கடவுச்சீட்டுகளை விநியோகித்தல்.

**2016 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்**

கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிப்போரின் உயிர்மானத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் கருத்திட்டத்தினுள் முகங் கொடுக்க நேர்ந்த சிற்சில தொழில்நுட்ப மற்றும் நடைமுறைச் சிரமங்களுக்கு மத்தியிலும் கூட, திணைக்களத்தின் புதிய கட்டிடத் தொகுதியினுள், வாடிக்கையாளர் சேவைகளை இடைநிறுத்தும் காலப்பகுதி ஏதும் இன்றி கடவுச்சீட்டுப் பிரிவை நிறுவி கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**வெற்றிகள்**

உயிர்மானக் கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் தொழிற்பாட்டின் கீழ், விண்ணப்பதாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கைவிரல் அடையாளங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் தொழிற்பாடு **(Biometric Project Phace)**வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**சவால்கள்**

01. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பின் அளவுகோல்களுக்கு முற்றிலும் பொருத்தமான தனிநபர் புகைப்படங்களை தொடரறா முறை **(Online)**மூலம் திணைக்களத்தின் தரவுத் தளத்திற்கு நேரடியாகப் பெற்றுக் கொள்ளல், **10** விரல்களினதும் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளல், ஆகக் கூடிய வாடிக்கையாளர் சேவை வசதிகள், சிறந்த ஆளணி கையாளல் ஆகிய பிரிவுகளில் திருப்தியடையும் விதத்தில் விளைவுப் பெருக்கமுடைய கடவுச்சீட்டு விநியோகத் தொழிற்பாடொன்றை திணைக்களத்தின் புதிய வளவில் நடைமுறைப்படுத்தல்.

02. சர்வதேச ரீதியில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களுடனும், பாதுகாப்பு கருவிகளுடனும் கூடிய கடவுச்சீட்டொன்றை அறிமுகம் செய்தல்.

**கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கைகளின் முன்னேற்றம் - 2016**

**பிரதான அலுவலகம்**

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமானது | மத்திய கிழக்கு நாடுகளுக்கானது | அவசர சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 401 | 1,846 | 355,317 | 177,452 | 23,398 | 12 | **558,426** |

**பிராந்திய அலுவலகங்கள்**


| | | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமானது | மத்திய கிழக்கு நாடுகளுக்கானது | அவசர சான்றிதழ் (தம்பதிவ யாத்திரை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கண்டி | 08 | 32,158 | 12,861 | 6,900 | **51,927** |
| 2. | வவுனியா | 01 | 15,558 | 5,868 | 817 | **22,244** |
| 3. | மாத்தறை | 01 | 19,361 | 4,130 | 2,636 | **26,128** |

**2016 ஆம் வருடத்தில் விநியோகிக்கப்பட்ட எல்லா விதமான கடவுச்சீட்டுகளினதும் எண்ணிக்கை**

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமானது | மத்திய கிழக்கு நாடுகளுக்கானது | அவசர சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 401 | 1,856 | 422,394 | 200,311 | 33,751 | 12 | **658,725** |

**2012 தொடக்கம் 2016 வரை கடவுச்சீட்டுகளை விநியோகித்தல் (கடவுச்சீட்டு வகையின் அடிப்படையில்)**

| வருடம் | இராஜதந்திர | உத்தியோகபூர்வ | எல்லா நாடுகளுக்குமானது | மத்திய கிழக்கு நாடுகளுக்கானது | அவசர சான்றிதழ் | அடையாளச் சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 288 | 899 | 303,524 | 230,482 | 35,697 | 04 | **570,894** |
| 2013 | 338 | 998 | 284,231 | 214,352 | 17,611 | 06 | **517,536** |
| 2014 | 309 | 1,043 | 234,943 | 198,815 | 14,786 | 06 | **449,902** |
| 2015 | 471 | 1,313 | 287,438 | 176,963 | 25,180 | 02 | **491,367** |
| 2016 | 401 | 1,856 | 422,394 | 200,311 | 33,751 | 12 | **658,725** |




**2:2 கடவுச்சீட்டு தயாரித்தல் கிளை**

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

புதிதாக கடவுச்சீட்டுகளைத் தயாரிப்பதற்காக கடவுச்சீட்டுக் கிளையிடமிருந்தும், வெளிநாட்டுத் தூதரகக் கிளையிடமிருந்தும் இக் கிளைக்குக் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதன் பின் கீழ்க் காட்டப்பட்டவாறு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

தரவு உள்ளீர்த்தல் **(Data Entry)**, அத் தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளல் **(Validate)**, விண்ணப்பதாரியின் புகைப்படத்தையும், கையொப்பத்தையும் வருடி எடுத்தல் **(Capture)**, அச்சிடுதல்**(Print)**, அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுகளில் மாற்றங்களும், அவதானிப்புகளும் இருப்பின் அவற்றை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் **(Observation Print)**, தரக் கட்டுப்பாடு **(Quality Assurance)**, கடவுச்சீட்டுகளை லெமினேட்டிங் செய்தல், பரீட்சித்தல், ஒப்பிட்டுப் பார்த்தலும் 4 ஆம் பக்கத்தை வருடி எடுத்தலும் **(Compare & 4th Page Scan)**, இறுதி தரப் பரிசோதனை **(Quality Control)**முதலான கட்டங்களின் பின்னர், ஒருநாள் சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுகள், கடவுச்சீட்டுக் கிளைக்கும், சாதாரண சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுகள் தபால் கிளைக்கும், வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்ப வேண்டிய கடவுச்சீட்டுகள் வெளிநாட்டுத் தூதரகக் கிளைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

கடவுச்சீட்டு திருத்தங்களுக்காக கடவுச்சீட்டு திருத்தக் கிளையினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களின் பின்னர் தரவு உள்ளீர்த்தல் **(Data Entry)**, அத் தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்**(Validate)**, திருத்தங்களை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் **(Observation Print)** முதலான கட்டங்களின் பின் கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 2. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 53 |
| 5. | கடவுச்சீட்டு உதவியாளர் | 18 |
| 6. | அலுவலக உதவியாளர் | 10 |

**2:3 கடவுச்சீட்டு திருத்தக் கிளை**

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| 3. | அலுவலக உதவியாளர் | 02 |

**கடவுச்சீட்டு திருத்தம் - 2016**


| | கடவுச்சீட்டு வகை | கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | எல்லா நாடுகளுக்குமாக செல்லுபடியாக்குதல் | 390 |
| 2. | தனிவழிப் பயண மட்டுப்படுத்தலை இரத்துச் செய்தல் | 2,053 |
| 3. | இரட்டைக் குடியுரிமையை உட்சேர்த்தல் | 376 |
| 4. | கடவுச்சீட்டிலிருந்து பிள்ளைகளை நீக்குதல் | 2,310 |
| 5. | தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்சேர்த்தல் | 4,209 |
| 6. | திருமணத்திற்கு முன்னுள்ள பெயரை இடுதல் | 255 |
| 7. | பெயரை மாற்றுதல் | 4,038 |
| 8. | திருமணத்திற்கு பின்னுள்ள பெயரை இடுதல் | 1,668 |
| 9. | பிற திருத்தங்கள் (கட்டணமின்றி) | 01 |
| 10. | பிற திருத்தங்கள் 01 | 15,814 |
| 11. | பிற திருத்தங்கள் 02 | 224 |
| 12. | பிற திருத்தங்கள் 03 | 02 |
| 13. | பெயரை மாற்றுதல் (பிற) | 03 |
| 14. | பதவியைக் குறிப்பிடுதல் | 39,629 |
| 15. | காலத்தை நீடித்தல் | 346 |
| | **மொத்தம்** | **71,318** |

**கடவுச்சீட்டு திருத்தம் (2012 தொடக்கம் 2016 வரை)**

| | கடவுச்சீட்டு வகை | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| 1. | எல்லா நாடுகளுக்குமாக செல்லுபடியாக்குதல் | 1,496 | 2,557 | 473 | - | 390 |
| 2. | ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்காக செல்லுபடியாக்குதல் | 667 | 541 | - | 397 | - |
| 3. | தனிவழிப் பயண மட்டுப்படுத்தலை இரத்துச் செய்தல் | 1,264 | 1,309 | 1,151 | 1,289 | 2,053 |
| 4. | செல்லுபடிக் காலத்தை நீடித்தல் | 28,740 | 10,384 | 2,368 | - | - |
| 5. | இரட்டைக் குடியுரிமையை உட்சேர்த்தல் | - | - | 11 | 209 | 376 |
| 6. | தாய்/ தந்தையின் கடவுச்சீட்டில் பிள்ளைகளை உட்சேர்த்தல் | 2,207 | 1,856 | 1,496 | 794 | - |
| 7. | தாய்/ தந்தையின் கடவுச்சீட்டிலிருந்து பிள்ளைகளை நீக்குதல் | 2,656 | 2,361 | 2,219 | 2,190 | 2,310 |
| 8. | தாய்/ தந்தையின் கடவுச்சீட்டில் பிள்ளைகளின் புதிய புகைப்படங்களை உட்சேர்த்தல் | 93 | 137 | 135 | 47 | - |
| 9. | தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்சேர்த்தல் | 1,496 | 1,671 | 2,070 | 2003 | 4,209 |
| 10. | திருமணத்திற்கு முன்னுள்ள பெயரை இடுதல் | 34 | 40 | 16 | 48 | 255 |
| 11. | திருமணத்திற்கு பின்னுள்ள பெயரை இடுதல் | 2,224 | 2,036 | 2,033 | 1,898 | 1,668 |
| 12. | பெயரை மாற்றுதல் | 3,984 | 3,399 | 3,119 | 3,265 | 4,038 |
| 13. | பெயரை மாற்றுதல் (பிற) | 02 | 07 | 03 | 02 | 03 |
| 14. | பதவியைக் குறிப்பிடுதல் | 47,347 | 55,655 | 66,922 | 54,400 | 39,629 |
| 15. | பதவியைக் குறிப்பிடுதல் (கட்டணமின்றி) | 02 | 02 | - | 880 | - |
| 16. | பிற திருத்தங்கள் (கட்டணமின்றி) | 137 | 151 | 81 | 09 | 01 |
| 17. | பிற திருத்தங்கள் 01 | 33,316 | 27,462 | 28,669 | 20,844 | 15,814 |
| 18. | பிற திருத்தங்கள் 02 | 1,363 | 995 | 913 | 330 | 224 |
| 19. | பிற திருத்தங்கள் 03 | 28 | 27 | 17 | 07 | 02 |
| 20. | புதுப்பித்தல் | - | - | - | - | 346 |
| | **மொத்தம்** | **127,056** | **110,590** | **111,696** | **88,612** | **71,318** |

பெற்றோரின் கடவுச்சீட்டுகளில் பிள்ளைகளை உட்சேர்த்தல் **2015.08.10** ஆம் திகதியின் பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இத் தினத்திற்குப் பின் வயது வித்தியாசமின்றி ஒவ்வொருவரும் தனியான கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

<u>கடவுச்சீட்டு திருத்தம் (2012 தொடக்கம் 2016 வரை)</u>



**2:4 வெளிநாட்டுத் தூதரகக் கிளை**

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | **பதவி/ சேவை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 15 |
| 5. | கடவுச்சீட்டு உதவியாளர் | 01 |
| 6. | அலுவலக உதவியாளர் | 04 |

**வெளிநாட்டுத் தூதரகக் கிளையின் பணிகள்**

- வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுடன் தொடர்புடையதாக கடவுச்சீட்டுகளை விநியோகித்தல்.
- தற்காலிக கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதற்கும், வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்குதல்.
- வெளிநாட்டுத் தூதரகங்களினால் வினவப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளுடன் தொடர்புடைய பிழையற்ற தன்மையை உறுதி செய்து அறிக்கைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

**2016 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள், வெற்றிகள், சவால்கள்**

மேற்சொன்ன நோக்கங்களையும், பணிகளையும் நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய விசேட பணிகளை முற்று முழுதாக நிறைவேற்றுதல்.


**2016** ஆம் வருடத்தில் இக் கிளையினால் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் தொடர்பான விபரங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ளன.

**இக் கிளையினால் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் -2016**

| | **மாதம்** | **கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | ஜனவரி | 2,848 |
| 2. | பெப்ரவரி | 2,049 |
| 3. | மார்ச் | 3,783 |
| 4. | ஏப்பிறல் | 4,788 |
| 5. | மே | 5,229 |
| 6. | ஜூன் | 4,491 |
| 7. | ஜூலை | 3,271 |
| 8. | ஓகஸ்ட் | 4,562 |
| 9. | செப்டம்பர் | 3,485 |
| 10. | ஒக்டோபர் | 3,322 |
| 11. | நவம்பர் | 3,673 |
| 12. | டிசம்பர் | 3,021 |
| | **மொத்தம்** | **44,522** |

**2012 தொடக்கம் 2016 வரை இப் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் தொடர்பான விபரம்**

| | மாதம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 2,813 | 2,117 | 2,829 | 2,027 | 2,848 |
| 2. | பெப்ரவரி | 1,731 | 2,225 | 3,312 | 3,152 | 2,049 |
| 3. | மார்ச் | 3,752 | 3,329 | 3,768 | 3,551 | 3,783 |
| 4. | ஏப்பிறல் | 3,426 | 3,298 | 3,446 | 4,082 | 4,788 |
| 5. | மே | 3,785 | 3,219 | 2,921 | 3,052 | 5,229 |
| 6. | ஜூன் | 3,770 | 4,256 | 3,346 | 3,573 | 4,491 |
| 7. | ஜூலை | 3,169 | 3,271 | 3,858 | 3,497 | 3,271 |
| 8. | ஓகஸ்ட் | 2,956 | 1,027 | 3,329 | 3,951 | 4,562 |
| 9. | செப்டம்பர் | 2,609 | 3,524 | 3,297 | 3,307 | 3,485 |
| 10. | ஒக்டோபர் | 3,343 | 3,015 | 3,632 | 3,112 | 3,322 |
| 11. | நவம்பர் | 2,610 | 3,918 | 2,010 | 1,833 | 3,673 |
| 12. | டிசம்பர் | 2,721 | 2,512 | 4,080 | 1,908 | 3,021 |
| | **மொத்தம்** | **36,685** | **35,711** | **39,828** | **37,045** | **44,522** |




**2016 ஆம் வருடத்தில் இலக்குகளும், முன்னேற்றங்களும்**

மேற்சொன்ன நோக்கங்களையும், பணிகளையும் நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய விசேட பணிகளை முற்று முழுதாக நிறைவேற்றுதல்.

## 2:5 தபால் கிளை

சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய கடவுச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு முடிந்ததன் பின், அக் கடவுச்சீட்டுகளை பதிவுத் தபாலில் விண்ணப்பதாரிக்கு அனுப்புதல் மற்றும் சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய கடவுச்சீட்டுகளை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளின் போது "குறித்த தினத்தில் விநியோகிக்கும்" முறையின் கீழ் கடவுச்சீட்டுகளைத் தயாரித்து விண்ணப்பதாரியிடம் ஒப்படைத்தல் என்பன இக் கிளையின் பிரதான பணிகளாகும்.

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**


| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 08 |
| 3. | காப்பாளர் | 01 |
| 4. | அலுவலக உதவியாளர் | 02 |

**மாதாந்தம் தபாலில் இடப்பட்ட கடவுச்சீட்டுகள் -2016**

| | மாதம் | கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஜனவரி | 9,750 |
| 2. | பெப்ரவரி | 9,023 |
| 3. | மார்ச் | 9,053 |
| 4. | ஏப்பிறல் | 4,473 |
| 5. | மே | 10,025 |
| 6. | ஜூன் | 8,049 |
| 7. | ஜூலை | 7,642 |
| 8. | ஓகஸ்ட் | 12,154 |
| 9. | செப்டம்பர் | 8,685 |
| 10. | ஒக்டோபர் | 9,757 |
| 11. | நவம்பர் | 8,829 |
| 12. | டிசம்பர் | 7,427 |
| | **மொத்தம்** | **104,867** |

**சாதாரண சேவையின் கீழ் தபாலில் இடப்பட்ட கடவுச்சீட்டுகள் 2012- 2016**

| வருடம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| தபாலில் இடப்பட்ட கடவுச்சீட்டுகள் | 85,957 | 70,961 | 69,768 | 71,817 | 104,867 |



## 3. கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

இப் பிரிவு கட்டுப்பாட்டாளர் (கொள்கை , அபிவிருத்தி, மறுசீரமைப்பு)/ பிரதி ஆணையாளர் (இந்தியா - இலங்கை) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது . இப் பிரிவு பிரதானமாக இந்திய - இலங்கைப் பிரஜை கிளை, கொள்கை மற்றும் அபிவிருத்திக் கிளை, சட்டக் கிளை ஆகிய கிளைகளைக் கொண்டுள்ளது.

### 3:1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை

கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி, மறுசீரமைப்பு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 3. | அலுவலக உதவியாளர் | 01 |

**2016ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

1. **2017** ஆம் வருடத்திற்கான செயற் திட்டத்தைத் **(Action Plan)**தயாரித்தல்.
2. **2015** ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
3. திணைக்களத்தினால் பிற நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
4. மூலதனக் கருத்திட்டங்களையும், ஏனைய கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்புச் செய்தல், வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
5. நேர்வரிசை அமைச்சுடனும், ஏனைய நிறுவனங்களுடனும், கொள்கை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கடமைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.
6. திணைக்களத்தின் பல்வேறுபட்ட தேவைகளின் அடிப்படையில் அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்து, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும், பிற அமைச்சுகளினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைத் பத்திரங்கள் சார்பில் அவதானிப்புகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும்.
7. திணைக்களச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.

**2016 ஆம் வருடத்தில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள்**

1. இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் நடைமுறையைச் சீரமைத்தல் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.
2. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினதும், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினதும் பிராந்திய அலுவலகங்களையும், உத்தேச வடமேல் அபிவிருத்தி அதிகார சபையினதும், வயம்ப செயலகத்தினதும் அலுவலகங்களையும் குருணாகலில் நிறுவுதல் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.
3. குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுசரணை நிலையமொன்றை அமைத்தல் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.

4. இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருக்கும் நபர்களை வீசா அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதிலிருந்து விடுவிப்பதற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், ஜோர்ஜியா அரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.

5. இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருக்கும் நபர்களை வீசா அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதிலிருந்து விடுவிப்பதற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும், பிலிப்பைன்ஸ் குடிரசுக்கும் இடையில் கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.

6. புலம்பெயர்வு நடவடிக்கைகள் தொடர்பில் சுவிஸ் சமஷ்டிப் பேரவைக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்படுகின்ற ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.

7. இலத்திரனியல் பயண அங்கீகாரம் **(Electronic Travel Authorization)**வழங்கப்படுகின்ற இணையத் தளத்தில் **Mobitel**இலட்சினையைக் காட்சிப்படுத்தல் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்.

**2016 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்**

1. திருகோணமலையில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியின் பாதுகாப்பு மற்றும் எல்லைகளை நிர்ணயம் செய்யும் வகையில் காணியைச் சுற்றி மதில் வேலியொன்றை அமை த்தலும், அக் காணியில் உத்தியோகத்தர்களுக்கான விடுதியொன்றை அமைப்பதற்குத் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளலும். இதற்காக கட்டிடத்திற்கான திட்ட வரைபைத் தயாரித்துக் கொள்வதற்கும், தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தலும்.

2. கம்பஹா, கட்டானை, களுதியவலவத்த காணியில் குடிவரவு, குடியகல்வு சட்டங்களை வலுவூட்டும் நிலையமொன்றை அமைப்பதற்கு த் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளலும், கட்டிடத்திற்கான திட்ட வரைபைத் தயாரித்துக் கொள்வதற்கும், தேவையான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தலும்.

3. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஓய்வறையை பழுதுபார்த்தல்.

4. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஓய்வறையை விஸ்தரிக்கும் நோக்குடன், புதிய மூன்று மாடிக் கட்டிடமொன் றை அமைத்தல்.

5. பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆள் அடையாள செயலகக் கட்டிடத்தில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தை நிறுவுதல்.

6. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினதும், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினதும் பிராந்திய அலுவலகங்களையும், அதே போன்று வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகத்தையும், வயம்ப செயலகத்தையும் குருணாகல் நகரில் நிறுவுவதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 3:2 இந்திய - இலங்கை பிரஜைகள் கிளை

குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் அவர்கள், பதவிமுறைப்பட்டதாக இந்திய வம்சாவழி மக்களை பதிவு செய்வதற்கான ஆணையாளர் பதவியை வகிப்பதுடன், கட்டுப்பாட்டாளர் (கொள்கை , அபிவிருத்தி, மறுசீரமைப்பு) அவர்கள், பதவிமுறைப்பட்டதாக இந்திய வம்சாவழி மக்களை பதிவு செய்வதற்கான பிரதி ஆணையாளராக செயற்படுவார்.


**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |

இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவழி மக்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தமது பதிவு தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை விநியோகித்தல் முதலான பிரதான பணிகள் இக் கிளையினால் நிறைவேற்றப்படுகின்றது.

**தமது பதிவு தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை விநியோகித்தல் 2012- 2016**

| | உரிய சட்டம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1949 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டம் | - | - | - | - | 149 |
| 2. | 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டம் | - | - | - | - | 48 |
| 3. | 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டம் | 14 | 09 | 19 | 48 | 49 |
| 4. | 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டம் | 08 | 02 | 03 | 02 | 01 |
| 5. | 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் கடிதங்களை விநியோகித்தல் | - | - | 01 | - | - |



### 3:3 சட்டக் கிளை

இக் கிளை கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி, மறுசீரமைப்பு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 3. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 4. | அலுவலக உதவியாளர் | 01 |

**சட்டக் கிளையின் நோக்கங்களும், பணிகளும்**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் மூலம், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பணிகளுடன் தொடர்புடைய சட்ட திட்டங்களூடாக அளிக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்குவதன் மூலமும், தேவைகளுக்கு ஏற்றவாறு குறித்த சட்ட திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமும் திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

**சட்டக் கிளையினால் 2016 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

1. திணைக்களத்தினால் தொடரப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய அழைப்பாணை மற்றும் பிடியாணைகளை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலும், அவ் அழைப்பாணைகளை/ பிடியாணைகளை உரிய நபர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும்.
2. குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அல்லது திணைக்களத்தின் வேறொரு உத்தியோகத்தருக்கு நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் பொருட்டு அழைப்பாணை முன்வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அவற்றுடன் தொடர்புடைய தகவல்களையும் கோப்புகளையும் தயார் செய்து, உரிய உத்தியோகத்தர்களை உரிய நாளில் நீதிமன்றத்தின் முன் தோன்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
3. நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த முடியாத, தகவல்கள் பூர்த்தியில்லா நீதிமன்ற உத்தரவுகள் தொடர்பில் 726 விளக்கக் கடிதங்கள் உரிய நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டன.
4. விசேட பொலிஸ் குற்றப் புலனாய்வு அலகுகளினாலும், பொலிஸ் நிலையங்களினாலும், மோசடிகளுடன் தொடர்புபட்ட பல்வேறு நபர்களின் தகவல்களைக் கேட்டு, அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு 33 பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டன.
5. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் திணைக்களத்தை பிரதிவாதியாகப் பெயரிடப்பட்ட 03 சந்தர்ப்பங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களையும், சாட்சியங்களையும் வழங்குதல். இத் திணைக்களத்தை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள 04 அடிப்படை உரிமை தொடர்பான வழக்குகள் என்பவற்றின்21போது அவதானிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. நாரா நிறுவனத்தின் உத்தியோகத்தரொருவர் தொடர்பில் அந் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையொன்றின் போது ம், சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட இரண்டு முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் போதும் மனுதாரர் தரப்பில் சாட்சியாளராகவும் சாட்சி அளிக்கப்பட்டது.

6. திணைக்களத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான கட்டிடங்கள், வீடுகள் என்பன தொடர்பில் உரிய தரப்புகளுக்கிடையில் செய்து கொள்ளப்படுகின்ற குத்தகை ஒப்பந்தங்களைத் தயாரித்து கைச்சாத்திடுவதற்காக முன்வைத்தலும், இவ் ஒப்பந்தங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும். (கண்டி, திருகோணமலை, மாத்த றை, மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், மத்தலை பிராந்திய அலுவலகங்கள்).

7. திணைக்களத்தின் பிரதான அலுவலகம் இயங்கி வந்த கொழும்பு **10**, ஆனந்த இராஜகருணா மாவத்தை, இல. **41** இல் அமைந்துள்ள கட்டிடத்தை அதன் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைப்பதற்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தலும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

8. திணைக்கள நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகள் தொடர்பில் உள்ளூர் நிறுவனங்களுடன் திணைக்களம் ஏற்படுத்திக் கொண்டுள்ள **23** ஒப்பந்தங்கள் சார்பில் அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

9. சர்வதேச புலம்பெயர் அமைப்பின் ஒத்துழைப்புடன் குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக, தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கும், தற்போதுள்ள நிலவரங்களுக்கும் இடையில் காணப்படுகின்ற இடைவெளியை இனங் காணும் வகையில் குழுக்களை **(Gap Analysis Committee)**அமைத்தலும், திருத்தங்களுக்குரிய யோசனைகளைத் தயாரித்து சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தலும்.

10. வெளிநாடுகளில் சட்டவிரோதமாகத் தரித்திருக்கும் இலங்கையர்களை மீளப் பொறுப்பேற்றல் தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெற்றஐரோப்பி ய சங்கத்துடனான **3** வது ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்குபற்றுதல்.

11. சுவிட்சர்லாந்துடன் கொழும்பில் நடைபெற்ற புலம்பெயர்ந்தோர் தொடர்பான உடன்படிக்கையின் வரைவினைத் தயாரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.

12. இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருப்போர்களுக்கு இரு தரப்பு இலவச வீசா வழங்கும் உடன்படிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

    கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்: ஜோர்ஜியா, கசகஸ்தான், பிலிப்பைன்ஸ்.

    ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ள நாடுகள் : பங்களாதேஷ், ஜோர்ஜியா.

13. கொழும்பில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஒத்துழைப்பு மாநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

**2016.01.01 தொடக்கம் 201 6.12.31 வரையிலான காலப்பகுதியில் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டப் பிரிவுநீதிமன்றத்தின் முன் சாட்சியம் அளிப்பதற்காகத் தோன்றிய தடவைகள்**

| | | **2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **உயர் நீதிமன்றம்** | **மேன்முறையீட்டு நீதிமன்றம்** | **வணிக நீதிமன்றம்** | **மேல் நீதிமன்றம்** | **மாவட்ட நீதிமன்றம்** | **நீதவான் நீதிமன்றம்** |
| 1 | கொழும்பு | 03 | 02 | 03 | 12 | 02 | 19 |
| 2 | நீர்கொழும்பு | - | - | - | 02 | - | 27 |
| 3 | பிற | - | - | - | 02 | 02 | 24 |
| | **மொத்தம்** | **03** | **02** | **03** | **16** | **04** | **70** |

## 4. வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

### 4:1 வீசா கிளை

கட்டுப்பாட்டாளர் (வீசா மற்றும் எல்லைக் கட்டுப்பாடு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் வீசா கிளை, துறைமுகக் கிளை, விசாரணைக் கிளை ஆகிய கிளைகள் இயங்குகின்றன.

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் (iii) ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜை அல்லாதோர் இலங்கைக்குள் பிரவேசித்தல், தரித்திருத்தல், வெளியேறுதல் என்பன ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்களுக்காக 1952 குடிவரவு, குடியகல்வு ஒழுங்குவிதிகளில் 02 தொடக்கம் 35 வரையிலான ஒழுங்குவிதிகளி ன் பிரகாரம் வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வீசா நீடிப்பு முதலான பணிகள் இப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இந் நாட்டில் சட்டபூர்வமாக தரித்திருப்பதற்காக செல்லுபடியான வீசா இப் பிரிவினாலேயே வழங்கப்படுகின்றது. வீசா வழங்கும் போது இலங்கையின் தேசிய பாதுகாப்பு பேணப்படுகின்றது என்பதை அத்தாட்சிப்படுத்திய வண்ணம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வது வீசா கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பிரதான நோக்கமாகும்.

மேற்சொன்ன நோக்கங்களை அடையும் வகையிலும், பணிகளை வழிநடாத்தி அமுல் செய்யும் வகையிலும் 2016 ஆம் வருடத்திற்காக வீசா பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த பணியாட் தொகுதி வருமாறு:

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 2. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 3. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 4. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 5. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 28 |
| 6. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 |
| 7. | கடவுச்சீட்டு உதவியாளர் | 01 |
| 8. | அலுவலக உதவியாளர் | 09 |

இதற்கு மேலதிகமாக, நிதிப் பிரிவிலிருந்து வாரந்தோறும் இணைக்கப்படுகின்ற அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இருவர் சிறாப்பர் பிரிவில் சேவையில் ஈடுபட்டனர்.

**2016 ஆம் வருடத்தில் முன்னேற்றம்**

**2016.01.01 தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முன் அங்கீகாரம் வழங்குதல், புதிதாக வீசா வழங்குதல் மற்றும் வீசா நீடிப்பு தொடர்பான விபரங்கள் வருமாறு**

| | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் பயண அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் (ETA). | 2,191,516 |
| 2. | புதிதாக வீசா வழங்குதல் (வசித்தல் வீசா) | 22,673 |
| 3. | வீசா நீடிப்பு 1. வசித்தல் வீசா | 22,483 |
| | 2. சுற்றுலா வீசா | 60,109 |
| 4. | சார்க் வீசா | 1,209 |
| 5. | இரட்டைக் குடியுரிமை வீசா (இலங்கையர்) | 2,538 |
| | **மொத்தம்** | **2,300,498** |

**வசித்தல் வீசா நீடிப்பும், வீசா வழங்கலும் - 2016**

| | வகை | வீசா நீடித்தல் | வீசா வழங்கல் | தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட பெக்ஸ் செய்திகள் | விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திகள்(Landing Endorsement) |
|---|---|---|---|---|---|
| 1. | முதலீட்டுச் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளோர் | 4,319 | 2,944 | 3,666 | 157 |
| 2. | இலங்கைப் பெற்றோரின் பிள்ளைகள் | 179 | 329 | - | - |
| 3. | பிரஜைகள் சட்டத்தின் 5.2 ஆம் பிரிவின் கீழ் | - | 1,615 | - | - |
| 4. | பிரஜைகள் சட்டத்தின் 5.1 ஆம் பிரிவின் கீழ் | - | 467 | - | - |
| 5. | மதகுருமார் | 800 | 247 | 157 | 32 |
| 6. | நீதிமன்ற உத்தரவு | 123 | 11 | - | - |
| 7. | இராஜதந்திர | - | 822 | 74 | 08 |
| 8. | முன்பு இலங்கையர்களாக இருந்தோர் | 2,047 | 1,480 | - | - |
| 9. | மருத்துவக் காரணிகள் மீது வருகை தந்தோர் | 416 | 389 | - | - |
| 10. | அரச சார்பற்ற நிறுவனங்கள் | 111 | 116 | 274 | 23 |
| 11. | அரசதுறையில் கடமையாற்ற வருகை தந்தோர் | 2,849 | 4,420 | 3,580 | 392 |
| 12. | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் | 92 | 103 | 17 | - |
| 13. | தனியார்துறையில்கடமையாற்ற வருகை தந்தோர் | 3,141 | 6,314 | 2,353 | 180 |
| 14. | பதிவு செய்யப்பட்ட இந்தியர்கள் | - | 30 | - | - |
| 15. | சமயம் சார்ந்த பணிகளுக்கு வந்தோர் | 437 | 1,039 | 1,356 | 191 |
| 16. | நீண்டகால வசிப்பிட வீசா ( 05 வருடங்கள்) (RGS) | 16 | 03 | - | - |
| 17. | இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் துணை | 3,350 | 1,165 | 01 | - |
| 18. | SSRV (My Dream Home) | 172 | 56 | - | - |
| 19. | கடமை நிமித்தம் (உத்தியோகபூர்வ பயணங்கள்) | 355 | 293 | 868 | 65 |
| 20. | மாணவர்கள்/ புலமைப் பரிசில்தாரர்கள் | 4,076 | 3,734 | 2,233 | 119 |
| | **மொத்தம்** | **22,483** | **22,673** | **14,665** | **1,168** |

**வீசா கிளையினால் நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்**

01. வீசா வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளின் போது தெரிய வந்த விடயங்களுக்கு உரியதாக அல்லது குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்ததன் பின், வீசா வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்த நிறுவனங்களின் மற்றும் தொடர்புடைய நபர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட வீசாக்களை, உரிய விசாரணைகளை நடாத்தி இரத்துச் செய்தலும் கரைநிரலில் சேர்த்தலும்.

02. 2014 ஆம் வருடத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பான விசேட நிலவரங்களின் கீழ் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், எகிப்து, சிரியா இனத்தவர்கள் இந் நாட்டிற்கு வருகை தரும் போது, அரச புலனாய்வுப் பிரிவிடம் முன்வைக்கப்பட்டு பாதுகாப்பு தீர்வைகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளல்.

03. மாணவர் வீசாக்களைப் பெற்று இந் நாட்டில் தரித்திருக்கும் மாலைதீவு மாணவர்கள், அவர்களில் தங்கி வாழ்வோர், பாதுகாவலர்கள் கடந்த சில வருடங்களாகசுற்றுலா வீசாக்களைப் பெற்று இந் நாட்டிற்கு வருகை த ந்ததன் பின் தமது வீசாக்களை, மாணவர் வீசாக்களாக மாற்றிக் கொள்வதில் காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உரிய கல்வி நிறுவனங்களிடமிருந்து25 தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக விசேட தரவுப் படிவமொன்று தயாரிக்கப்பட்டது டன், அப் படிவத்தைப் பூர்த்தி செய்ததன் பின் வசித்தல் வீசா வழங்கப்படுகின்றது. வெளிநாட்டு மாணவ பிக்குகளுக்கு, பிக்குனிகளுக்கு, மருத்துவ மாணவர்களுக்குகட்டணம் அறவிட்டு வீசா வழங்கும் நடைமுறை யை தொடர்ந்தும் மேற்கொள்ளல்.

04. இதுவரை அமுலில் இருந்த வீசா வழங்கும் முறையை மீளாய்வு செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு இற்றைப்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்தல்.

05. வீசா வழங்கும் விண்ணப்பங்களை வருடி எடுக்கும் முறை (Scanning)குறித்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் முதற் கட்டமாக 2014 ஆம் வருடம் தொடக்கம் 2016 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையிலான கோப்புகளும், இரண்டாவது கட்டமாக 2016 பெப்ரவரி 08 தொடக்கம் 2016 ஒக்றோபர் 01 ஆம் திகதி வரையிலான கோப்புகளும் வருடி எடுக்கப்பட்டன. இப் பணிகள் சஞ்சே லங்கா (தனியார்) கம்பனியால் நிறைவேற்றப்பட்டது.

06. இறப்பர் முத்திரையைப் பதித்து புறக்குறிப்பு இடுவதற்குப் பதிலாக வீசா ஸ்ரிக்கர் மூலம் வீசா வழங்கும் நடைமுறை 2016.06.15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை இவ் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட சாதகமான நடவடிக்கையொன்றாகும். இதனூடாக போலி வீசா வழங்கும் நடவடிக்கைகள் தடுக்கப்படுகின்றது.

07. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் 2016.08.26ஆம் திகதி தொடக்கம் பத்தரமுல்லை, "சுகுறுபாயா" புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, வீசா பிரிவானது "சுகுறுபாயா" கட்டிடத்தின் நான்காம் மாடியில் A, B, Cபகுதிகளில் போதிய இடவசதிகளுடன் கூடியதாக நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் அதுவரை வீசா பிரிவில் இருந்து வந்த இடவசதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

08. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து 2016.08.26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டும் வீசா பிரிவு கடமைகளில் இருந்து விலகியிருந்ததுடன், 2016.08.29ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வழமை போல் வீசா பிரிவு இயங்கத் தொடங்கியது.

09. 2016 ஒக்றோபர் 03 ஆம் திகதி தொடக்கம் அந்தந்த விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால், தமது விடயத்திற்குரிய விண்ணப்பங்களை வருடி எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கடுத்த வாரத்திலிருந்து அதாவது 2016.10.10ஆம் திகதி தொடக்கம் வருடி எடுக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மீண்டும் விண்ணப்பதாரிகளிடத்தில் பெற்றுக் கொடுப்பதினூடாக, வீசா பிரிவில் தேவையற்ற விதத்தில் ஆவணங்கள் வந்து குவிவது மட்டுப்படுத்தப்பட்டமை 2016 ஆம் வருடத்தில் அடைந்த முக்கிய வெற்றியாகும்.

10. வீசா வழங்கும் தொழிற்பாட்டை மீள் பொறியியல்மயப்படுத்திய வண்ணம், வீசா வழங்குவதற்கான புதிய முறைமையொன்று பிரதான கிளையில் நிறுவப்படுதலும், அதற்காக தேவையான கருவிகளைப் பொருத்துதலும்.

11. தெரிவு செய்யப்பட்ட ஒருசில நாடுகளுக்காக சுற்றுலா வீசாக்களை நீடிக்கும் நடவடிக்கைகளை இணையத்தளத்தினூடாக மேற்கொள்வதுடன் தொடர்புடைய ஆரம்ப நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுதல்.

12. கடனட்டை **(Credit Card)** மூலம் வீசா கட்டணங்களை அறவிடும் முறை **2016.12.09**ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வசதியாக இருத்தலும், கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படத் தன்மையுடன் பேணிச் செல்ல முடிதலும்.

13. பிரிவின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை மாதத்திற்கு இரு தடவைகள் நடாத்துவதன் மூலம் நிலவும் குறைபாடுகள், பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கு தீர்வு காணல்.

**2017 ஆம் வருடத்தில் அமுல் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கருத்திட்டங்கள்**

1. கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வருகை தரு வீசா நடைமுறையை தன்னியக்கமயப்படுத்தும் நோக்குடன், பயணிகளுக்கு இலகுவாக வீசாக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு **Kiosks** இயந்திரத்தைப் பொருத்துதல்.
2. தற்போது நடைமுறையிலுள்ள வீசா வழங்கும் முறைமையை தொடர்ந்தும் நேசம் கொண்ட விதத்திலும், புதிய வசதிகளை அறிமுகம் செய்யும் விதத்திலும் மீள் பொறியியல்மயப்படுத்தல்.
3. சுற்றுலா வீசாக்களை நீடிக்கும் தொழிற்பாட்டை தொடரறா முறை **(Online)**மூலம் மேற்கொள்ளக் கூடிய விதத்தில் புதிய முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
4. வீசா விண்ணப்பங்களை சமர்ப்பித்த சந்தர்ப்பம் தொடக்கம் வீசா புறக்குறிப்பைப் பெற்றுக் கொடுக்கும் வரையான ஒட்டுமொத்தத் தொழிற்பாட்டினதும் தகவல்களை குறுஞ் செய்தியாக உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிப்பதற்கு முறைமையொன்றை நிர்மாணித்தல்.
5. வீசா ஸ்ரிக்கர்களை விநியோகிப்பதற்காக பொருட்பட்டியல் முறைமையொன்றை அறிமுகம் செய்தல்.
6. புதிய ஒழுகு வரிசை முகாமைத்துவ முறை ஊடாக வினைத்திறன் மிக்கவாறும், வெளிப்படையாகவும் வாடிக்கையாளர்களுக்கு வசதிகளைச் செய்தல்.
7. **2017** வரவு - செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைய வீசா கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்வதினூடாக அரசாங்க வருமானத்தை அதிகரித்தலும், முரண்பாடுகளை நீக்குதலும்.

4:2 **துறைமுகக் கிளை**

கட்டுப்பாட்டாளர் (வீசா) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**


| | **பதவி/ சேவை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| | பிரதிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 2. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 33 |
| 3. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 312 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| 5. | அலுவலக உதவியாளர் | 03 |


**இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் துறைமுகங்கள்**

1. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் - கட்டுநாயக்க
2. மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்
3. கொழும்பு விமான நிலையம் - இரத்மலானை
4. பலாலி விமான நிலையம்
5. கொக்கலை விமான நிலையம்
6. கொழும்புத் துறைமுகம்
7. காலித் துறைமுகம்
8. மாகம் ருகுணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகம்
9. திருகோணமலைத் துறைமுகம்
10. காங்கேசன்துறைத் துறைமுகம்
11. தலைமன்னார் இறங்குதுறை
12. நுரைச்சோலை துறைமுகம்
13. ஒலுவில் துறைமுகம்

**அந்தந்த துறைமுகங்கள் ஊடாக இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை -2016**


| | **துறைமுகம்** | **வருகை தந்தோரின் எண்ணிக்கை** | **வெளியேறியோரின் எண்ணிக்கை** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 1. | கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் | 3,622,708 | 3,580,898 | **7,203,606** |
| 2. | ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 78 | 61 | **139** |
| 3. | மத்தளை விமான நிலையம் | 2,262 | 2,697 | **4,959** |
| 4. | கொழும்புத் துறைமுகம் | 10,792 | 10,055 | **20,847** |
| 5. | காலித் துறைமுகம் | 15,531 | 13,807 | **29,338** |
| 6. | நுரைச்சோலை துறைமுகம் | 166 | 130 | **296** |
| 7. | திருகோணமலைத் துறைமுகம் | 519 | 622 | **1,141** |
| 8. | இரத்மலானை விமான நிலையம் | 20 | 35 | **55** |
| | **கூட்டுமொத்தம்** | **3,652,076** | **3,608,305** | **7,260,381** |





**மாதாந்தம் இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பான விபரம் -2016**

| | | வருகை தந்தோரின் எண்ணிக்கை | | | வெளியேறியோரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மாதம் | இலங்கையர்கள் | வெளிநாட்டவர்கள் | வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கை | இலங்கையர்கள் | வெளிநாட்டவர்கள் | வெளியேறியோரின் மொத்த எண்ணிக்கை |
| 1. | ஜனவரி | 120,521 | 204,011 | **324,532** | 119,837 | 226,586 | **346,423** |
| 2. | பெப்ரவரி | 97,538 | 205,216 | **302,754** | 111,153 | 213,511 | **324,664** |
| 3. | மார்ச் | 118,312 | 201,211 | **319,523** | 109,722 | 200,585 | **310,307** |
| 4. | ஏப்பிறல் | 142,724 | 146,322 | **289,046** | 132,485 | 170,339 | **302,824** |
| 5. | மே | 116,039 | 134,024 | **250,063** | 112,645 | 141,054 | **253,699** |
| 6. | ஜூன் | 119,997 | 126,773 | **246,770** | 99,501 | 115,424 | **214,925** |
| 7. | ஜூலை | 133,863 | 220,266 | **354,129** | 111,121 | 173,875 | **284,996** |
| 8. | ஓகஸ்ட் | 137,734 | 197,583 | **335,317** | 152,826 | 231,865 | **384,691** |
| 9. | செப்டம்பர் | 120,782 | 157,939 | **278,721** | 138,335 | 170,948 | **309,283** |
| 10. | ஒக்டோபர் | 111,106 | 159,571 | **270,677** | 118,044 | 158,984 | **277,028** |
| 11. | நவம்பர் | 115,969 | 177,793 | **293,762** | 108,056 | 163,715 | **271,771** |
| 12. | டிசம்பர் | 150,419 | 236,363 | **386,782** | 134,061 | 193,633 | **327,694** |
| | **மொத்தம்** | **1,485,004** | **2,167,072** | **3,652,076** | **1,447,786** | **2,160,519** | **3,608,305** |



**வலயங்களின் அடிப்படையில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்கள் -2016**

| | மாதம் | ஆபிரிக்கா | ஆசியா | அவுஸ்திரேலியா | ஐரோப்பா | வட அமெரிக்கா | தென் அமெரிக்கா | அந்தாட்டிக் | பிற | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 1,473 | 94,639 | 8,560 | 88,675 | 10,133 | 418 | 01 | 112 | **204,011** |
| 2. | பெப்ரவரி | 1,359 | 91,678 | 5,458 | 97,056 | 9,126 | 436 | - | 103 | **205,216** |
| 3. | மார்ச் | 1,997 | 92,329 | 7,527 | 88,675 | 10,090 | 435 | - | 158 | **201,211** |
| 4. | ஏப்பிறல் | 1,475 | 77,642 | 6,086 | 53,354 | 7,343 | 295 | - | 127 | **146,322** |
| 5. | மே | 1,548 | 85,287 | 4,664 | 34,178 | 7,823 | 299 | - | 225 | **134,024** |
| 6. | ஜூன் | 1,070 | 72,234 | 7,270 | 36,755 | 9,099 | 249 | - | 96 | **126,773** |
| 7. | ஜூலை | 1,954 | 107,962 | 8,965 | 89,573 | 11,409 | 276 | - | 127 | **220,266** |
| 8. | ஒகஸ்ட் | 1,698 | 101,084 | 7,833 | 76,374 | 10,197 | 230 | - | 167 | **197,583** |
| 9. | செப்டம்பர் | 2,112 | 90,464 | 7,626 | 50,620 | 6,628 | 340 | - | 149 | **157,939** |
| 10. | ஒக்டோபர் | 1,320 | 86,939 | 5,441 | 58,643 | 6,708 | 354 | - | 166 | **159,571** |
| 11. | நவம்பர் | 1,723 | 90,531 | 7,397 | 69,974 | 7,612 | 361 | - | 195 | **177,793** |
| 12. | டிசம்பர் | 3,365 | 106,658 | 17,995 | 93,483 | 14,275 | 502 | - | 85 | **236,363** |
| | **மொத்தம்** | **21,094** | **1,097,447** | **94,822** | **837,360** | **110,443** | **4,195** | **01** | **1,710** | **2,167,072** |



## துறைமுகங்களின் அடிப்படையில் இலங்கைக்கு வருகை தந்த இலங்கையர்கள் -2016

| | மாதம் | கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் | நுரைச்சோலை துறைமுகம் | மத்தளை விமான நிலையம் | கொழும்புத் துறைமுகம் | காலித் துறைமுகம் | திருகோணமலைத் துறைமுகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 120,352 | - | 41 | 64 | 52 | 12 | **120,521** |
| 2. | பெப்ரவரி | 97,358 | - | 39 | 70 | 65 | 06 | **97,538** |
| 3. | மார்ச் | 118,094 | - | 52 | 77 | 72 | 17 | **118,312** |
| 4. | ஏப்பிறல் | 142,060 | 01 | 63 | 497 | 97 | 06 | **142,724** |
| 5. | மே | 115,720 | 02 | 124 | 67 | 123 | 03 | **116,039** |
| 6. | ஜூன் | 119,704 | - | 97 | 71 | 120 | 05 | **119,997** |
| 7. | ஜூலை | 133,594 | - | 110 | 58 | 81 | 20 | **133,163** |
| 8. | ஓகஸ்ட் | 137,534 | - | 79 | 60 | 54 | 07 | **137,734** |
| 9. | செப்டம்பர் | 120,625 | 01 | 58 | 31 | 59 | 08 | **120,782** |
| 10. | ஒக்டோபர் | 11,369 | 04 | 70 | 573 | 83 | 07 | **111,106** |
| 11. | நவம்பர் | 115,745 | 12 | 58 | 54 | 89 | 11 | **115,969** |
| 12. | டிசம்பர் | 150,185 | 09 | 54 | 48 | 114 | 09 | **150,419** |
| | மொத்தம் | **1,481,340** | **29** | **845** | **1,670** | **1,009** | **111** | **1,485,004** |

## துறைமுகங்களின் அடிப்படையில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர்கள் -2016


| | மாதம் | கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் | ஹம்பாந்தோட்டை துறைமுகம் | மத்தளை விமான நிலையம் | நுரைச்சோலை துறைமுகம் | கொழும்புத் துறைமுகம் | காலித் துறைமுகம் | இரத்மலானை விமான நிலையம் | திருகோணமலை துறைமுகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 201,603 | 04 | 13 | 02 | 881 | 1,489 | 06 | 13 | **204,011** |
| 2. | பெப்ரவரி | 203,115 | 16 | 30 | 17 | 846 | 1,155 | 03 | 34 | **205,216** |
| 3. | மார்ச் | 199,048 | 08 | 50 | 07 | 692 | 1,379 | - | 27 | **201,211** |
| 4. | ஏப்பிறல் | 144,201 | 03 | 72 | 01 | 773 | 1,261 | - | 11 | **146,322** |
| 5. | மே | 132,322 | 11 | 61 | - | 444 | 1,175 | - | 11 | **134,024** |
| 6. | ஜூன் | 125,112 | 02 | 75 | 01 | 472 | 1,068 | - | 43 | **126,773** |
| 7. | ஜூலை | 218,507 | 07 | 232 | - | 440 | 1,027 | 03 | 50 | **220,266** |
| 8. | ஓகஸ்ட் | 195,712 | 01 | 181 | - | 521 | 1,132 | - | 36 | **197,583** |
| 9. | செப்டம்பர் | 156,128 | 03 | 229 | - | 369 | 1,143 | - | 67 | **157,939** |
| 10. | ஒக்டோபர் | 156,122 | 06 | 62 | 55 | 2,033 | 1,252 | 08 | 33 | **159,571** |
| 11. | நவம்பர் | 175,254 | 15 | 261 | 32 | 973 | 1,210 | - | 48 | **177,793** |
| 12. | டிசம்பர் | 234,244 | 02 | 151 | 22 | 678 | 1,231 | - | 35 | **236,363** |
| | மொத்தம் | **2,141,368** | **78** | **1,417** | **137** | **9,122** | **14,522** | **20** | **408** | **2,167,072** |

## நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர்கள்(Refused Entry)-2016

| | நாடு/ இனத்தவர் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்பிறல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பங்களாதேஷ் | - | - | 01 | 01 | - | 02 | - | 05 | - | 01 | 13 | 12 | 35 |
| 2. | இந்தியா | 25 | 17 | 13 | 26 | 12 | 25 | 21 | 09 | 23 | 22 | 16 | 08 | 217 |
| 3. | சுவீடன் | 01 | - | - | - | - | - | - | 01 | - | 01 | - | - | 03 |
| 4. | பலஸ்தீன் | - | - | - | - | 03 | - | 01 | - | - | - | - | - | 04 |
| 5. | கமரூன் | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 13 | 14 |
| 6. | பாகிஸ்தான் | 23 | 20 | 21 | 23 | 30 | 02 | 11 | 34 | 11 | 10 | 42 | 12 | 239 |
| 7. | சீனா | - | 35 | 34 | 15 | 12 | 14 | 06 | 17 | 28 | 39 | 10 | - | 210 |
| 8. | ஆப்கானிஸ்தான் | 22 | 32 | 42 | 06 | 01 | 04 | 01 | 17 | 03 | 01 | 02 | 35 | 166 |
| 9. | ரஷ்யா | 01 | - | 02 | - | - | 01 | - | 01 | - | 02 | - | - | 07 |
| 10. | இந்தோனேசியா | - | - | 01 | - | - | - | - | - | - | 02 | - | - | 03 |
| 11. | பிரான்ஸ் | - | - | 02 | - | - | - | - | - | - | - | - | - | 02 |
| 12. | சவுதி அரேபியா | - | - | - | - | - | - | 01 | - | - | - | - | - | 01 |


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | கிர்கிஸ்தான் | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| 14. | அவுஸ்திரேலியா | 01 | 02 | - | - | - | - | - | - | - | - | - | - | 03 |
| 15. | நைஜீரியா | - | - | - | 02 | - | - | - | 02 | - | 03 | - | 01 | 08 |
| 16. | அமெரிக்கா | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | - | 01 |
| 17. | ஈரான் | - | 03 | - | - | - | 02 | 04 | - | - | 01 | - | 02 | 12 |
| 18. | ஜேர்மனி | 01 | - | - | - | - | - | 01 | 01 | - | - | - | 01 | 04 |
| 19. | உக்ரேன் | - | - | - | - | 03 | - | - | - | - | - | - | - | 03 |
| 20. | இத்தாலி | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | 01 |
| 21. | பிரித்தானியா | 01 | - | - | 01 | - | - | - | 02 | - | - | - | - | 04 |
| 22. | ஐவரிகோஸ்ட் | 01 | - | - | 01 | - | - | 01 | - | - | - | - | - | 03 |
| 23. | நியுசீலாந்து | - | - | - | - | - | - | - | - | - | - | - | 04 | 04 |
| 24. | மாலைத்தீவு | 01 | - | - | - | 01 | - | - | 01 | 02 | - | - | - | 05 |
| 25. | ஜப்பான் | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 02 |
| 26. | கினி | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| 27. | கனடா | - | - | - | 01 | 01 | - | - | - | - | - | 01 | 01 | 04 |
| 28. | சியராலியோன் | - | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | 01 |
| 29. | உஸ்பகிஸ்தான் | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | 01 |
| 30. | துர்கி | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 31. | சிங்கப்பூர் | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | 01 |
| 32. | பூட்டான் | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | 01 |
| 33. | சிரியா | - | - | - | - | - | - | 01 | - | 05 | - | - | - | 06 |
| 34. | பொலீவியா | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | 01 |
| 35. | குவைத் | - | - | - | - | - | - | - | - | - | 01 | - | - | 01 |
| 36. | நேபாளம் | 08 | - | 21 | - | - | - | - | 01 | - | 35 | 13 | - | 78 |
| 37. | தாய்லாந்து | - | - | 01 | - | 01 | 02 | - | 03 | - | - | - | - | 07 |
| 38. | நெதர்லாந்து | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 39. | யெமன் | - | - | - | - | 08 | - | - | - | - | - | - | - | 08 |
| 40. | பிலிப்பைன்ஸ் | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 41. | உகன்டா | - | - | - | - | 03 | - | - | - | - | - | - | - | 03 |
| 42. | கானா | - | - | - | - | 01 | 02 | - | - | - | 01 | - | - | 04 |
| 43. | ஆர்ஜன்டீனா | - | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | 01 |
| 44. | ஸ்பெய்ன் | - | - | - | - | - | - | - | - | - | - | - | 03 | 03 |
| 45. | கொரியா | - | - | - | 01 | 01 | - | - | - | - | - | - | - | 02 |
| 46. | எகிப்து | 02 | - | 11 | 05 | 06 | 01 | 04 | 03 | 03 | - | - | 06 | 41 |
| 47. | மலேசியா | - | - | 02 | - | - | - | - | 01 | - | - | - | - | 03 |
| 48. | முருசி | - | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| 49. | இஸ்ரவேல் | - | - | 02 | - | - | 02 | 01 | - | 01 | - | - | - | 06 |
| 50. | தன்சானியா | - | 03 | - | - | - | - | - | 03 | - | - | - | - | 03 |
| | **மொத்தம்** | **89** | **113** | **154** | **85** | **84** | **58** | **55** | **98** | **78** | **123** | **99** | **98** | **1,134** |

### நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்ட வெளிநாட்டவர்கள்(Refused Entry)-2016





### கப்பற் பணியாட் தொகுதியினரின் வருகை -2016

| | மாதம் | கொழும்புத் துறைமுகம் | காலித் துறைமுகம் | திருகோணமலைத் துறைமுகம் | நுரைச்சோலை துறைமுகம் | ஹம்பாந்தோட்டை துறைமுகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 505 | 1,477 | 28 | 07 | 01 | 2,018 |
| 2. | பெப்ரவரி | 421 | 1,087 | 13 | 17 | 12 | 1,550 |
| 3. | மார்ச் | 497 | 1,315 | 38 | 07 | 02 | 1,859 |
| 4. | ஏப்பிறல் | 491 | 1,190 | 17 | 08 | 03 | 1,709 |
| 5. | மே | 483 | 1,234 | 28 | 01 | 11 | 1,757 |
| 6. | ஜூன் | 474 | 1,155 | 10 | - | 03 | 1,642 |
| 7. | ஜூலை | 428 | 1,099 | 37 | - | 04 | 1,568 |
| 8. | ஓகஸ்ட் | 526 | 1,102 | 28 | - | - | 1,656 |
| 9. | செப்டம்பர் | 374 | 1,137 | 74 | - | 05 | 1,590 |
| 10. | ஒக்டோபர் | 468 | 1,121 | 35 | 10 | 06 | 1,640 |
| 11. | நவம்பர் | 498 | 968 | 92 | 44 | 12 | 1,614 |
| 12. | டிசம்பர் | 571 | 1,226 | 32 | 31 | 02 | 1,862 |
| | **மொத்தம்** | **5,736** | **14,111** | **432** | **94** | **61** | **20,465** |



**கப்பற் பணியாட் தொகுதியினர் வெளியேறுதல் -2016**

| | மாதம் | கொழும்புத் துறைமுகம் | காலித் துறைமுகம் | திருகோணமலைத் துறைமுகம் | நுரைச்சோலை துறைமுகம் | ஹம்பாந்தோட்டை துறைமுகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஜனவரி | 471 | 1,303 | 20 | 08 | 01 | **1,803** |
| 2. | பெப்ரவரி | 447 | 1,056 | 20 | 17 | 09 | **1,549** |
| 3. | மார்ச் | 512 | 1,262 | 38 | 09 | 03 | **1,824** |
| 4. | ஏப்பிறல் | 395 | 1,163 | 22 | 06 | 04 | **1,590** |
| 5. | மே | 517 | 1,216 | 26 | 01 | 09 | **1,769** |
| 6. | ஜூன் | 470 | 1,097 | 68 | - | 06 | **1,641** |
| 7. | ஜூலை | 455 | 1,090 | 33 | - | 03 | **1,581** |
| 8. | ஓகஸ்ட் | 510 | 881 | 35 | - | - | **1,426** |
| 9. | செப்டம்பர் | 420 | 936 | 33 | 02 | 04 | **1,395** |
| 10. | ஒக்டோபர் | 399 | 1,000 | 34 | 09 | 07 | **1,449** |
| 11. | நவம்பர் | 513 | 951 | 69 | 59 | 16 | **1,608** |
| 12. | டிசம்பர் | 514 | 1,053 | 41 | 25 | - | **1,633** |
| | **மொத்தம்** | **5,623** | **13,008** | **439** | **136** | **62** | **19,268** |




**கப்பற் பணியாட் தொகுதியினருக்கு பிணைமுறி ஸ்ரிக்கர்களை விநியோகித்தல் - மாதாந்த வருமானம் -2016**

| | மாதம் | விநியோகிக்கப்பட்ட ஸ்ரிக்கர்களின் எண்ணிக்கை | வருமானம் (அலகொன்றின் பெறுமதி ரூ. 1,000/-) ரூ. |
|---|---|---|---|
| 1. | ஜனவரி | 3,066 | 3,066,000 |
| 2. | பெப்ரவரி | 2,560 | 2,560,000 |
| 3. | மார்ச் | 3,655 | 3,655,000 |
| 4. | ஏப்பிறல் | 3,549 | 3,549,000 |
| 5. | மே | 2,577 | 2,577,000 |
| 6. | ஜூன் | 3,121 | 3,121,000 |
| 7. | ஜூலை | 2,714 | 2,714,000 |
| 8. | ஓகஸ்ட் | 3,020 | 3,020,000 |
| 9. | செப்டம்பர் | 2,575 | 2,575,000 |
| 10. | ஒக்டோபர் | 2,947 | 2,947,000 |
| 11. | நவம்பர் | 3,266 | 3,266,000 |
| 12. | டிசம்பர் | 2,523 | 2,523,000 |
| | **மொத்தம்** | **35,573** | **35,573,000** |

**கடவுச்சீட்டுகளை விரைவான பொதிச் சேவை மூலம் அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்குதல் - 2016**

இலங்கையில் தூதரங்கள் அமையப் பெற்றில்லாத நாடுகளுக்குச் செல்லத் தேவைப்படுவோருக்கு அந் நாடுகளுக்குள் பிரவேசிப்பதற்குத் தேவையான வீசாக்களைப் பெற்றுக் கொள்வதற்காக, அந் நாடுகளின் தூதரகங்கள் அமைந்துள்ள நாடொன்றிற்கு கடவுச்சீட்டை விரைவான பொதிச் சேவை மூலம் அனுப்புவதற்கு இதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. (உதாரணமாக நியுசீலாந்து நாட்டிற்கான வீசாவைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தியாவின் புதுடில்லி நகரில் அமைந்துள்ள நியுசீலாந்து தூதரகத்திற்கு, விண்ணப்பதாரியின் கடவுச்சீட்டு பொதிச் சேவை மூலம் அனுப்பப்படும்).

இதற்கமைய **2016** ஆம் வருடத்தில் **30,676** கடவுச்சீட்டுகளை திணைக்கள அங்கீகாரத்தின் விரைவான கீழ் பொதிச் சேவை மூலம் அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதுடன், இதற்காக கடவுச்சீட்டொன்றிற்கு ரூ. **1,000/-** அறவிடப்படுகின்றது. இதற்கமைய **2016** ஆம் வருடத்தில் ரூ. **30,676,000/-** வருமானம் ஈட்டப்பட்டது.

**கடவுச்சீட்டுகளை விரைவான பொதிச் சேவை மூலம் அனுப்புவதில் முன்னேற்றம் - 2014 - 2016**

| | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| வருமானம் (ரூ.) | 26,286,000.00 | 28,820,000.00 | 30,676,000.00 |

**4:3 விசாரணைக் கிளை**

கட்டுப்பாட்டாளர் (வீசா) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இக் கிளை இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி -2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 01 |
| 2. | சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 01 |
| 3. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 07 |

**மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுதல் -2016**

| | நாடு/ இனத்தவர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பங்களாதேஷ் | 46 |
| 2. | சீனா | 04 |
| 3. | இந்தியா | 75 |
| 4. | ஈரான் | 04 |
| 5. | ஈராக் | 02 |
| 6. | அவுஸ்திரேலியா | 02 |
| 7. | ஜேர்மனி | 02 |
| 8. | லெபனான் | 03 |
| 9. | பிரித்தானியா | 01 |
| 10. | நைஜீரியா | 03 |
| 11. | பாகிஸ்தான் | 09 |
| 12. | கனடா | 01 |
| 13. | ரஷ்யா | 01 |

| | | |
|---|---|---|
| 14. | உக்ரேன் | 02 |
| 15. | தாய்லாந்து | 01 |
| 16. | மலேசியா | 01 |
| 17. | சுவீடன் | 01 |
| 18. | யெமன் | 01 |
| | **மொத்தம்** | **159** |

**மனித வியாபாரத்தை ஒழிக்கும் தேசிய வள நிலையத்தின் (NCHTRC) கீழ் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்களிப்புச் செய்தல்**

- **2015 - 2019** மனித வியாபாரத்தை ஒழிப்பதற்கான திறமுறை திட்டத்திற்குப் பங்களிப்பை வழங்குதல்.
- மனித வியாபாரம் தொடர்பான நியம நடவடிக்கை நடைமுறைக்கு **(S.O.P.)**பங்களிப்பை வழங்குதல்.

**நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்**

அகதிகள் தொடர்பான சர்வதேச சட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதுவராலயத்தின் **(UNHCR)**அனுசரணையில் **40** அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களை செயலமர்வொன்றில் பங்குபற்றச் செய்தல்.

## 5. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி -2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| 2. | அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 05 |
| 3. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 4. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| 5. | கடவுச்சீட்டு உதவியாளர் | 03 |
| 6. | அலுவலக உதவியாளர் | 01 |

திணைக்களத்தின் தற்போது பயன்பாட்டிலுள்ள மென்பொருள் முறைமைகளையும், வன்பொருள் முறைமைகளையும் தடையின்றி பேணிச் செல்வதும், பொது மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்கும் அதேவேளை, அரசுக்கு உச்ச நன்மை கிடைக்கும் விதத்தில் புதிய தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகம் செய்த வண்ணம் தகவல் முறைமையை விருத்தி செய்வதுமே தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணியாகும்.

அதே போன்று, இத் திணைக்களத்தின் கணினி முறைமைக்கான சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை உரியவாறு இற்றைப்படுத்துதல், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பனவும் இப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற இன்னும் சில பணிகளாகும்.

மேற்சொன்ன பிரதான பணிகளுக்கு மேலதிகமாக, கீழ்க் காணும் முக்கிய பணிகளும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

**(1)** 1. பொது மக்களின் தேவைகள் தொடர்பில் கூருணர்வுடன் செயற்பட்டு, இயக்கத்திலுள்ள ஐந்து **(05)** கணினி மென்பொருள் மொடியுலர்களுக்கும் தேவையான மேம்படுத்தல்களைச் செய்து, அவற்றின் விளைவுப் பெருக்கத்தைக் கூட்டுதல்.

2. திணைக்களத்தை பத்தரமுல்லை புதிய கட்டிடத் தொகுதியில் நிறுவும் போது, புதிய அலுவலகக் கட்டிடத் தொகுதிக்கான கணினி முறைமையை சிறந்த முறையில் நிறுவுவதில் தேவையான ஆரம்ப கட்டப் பணிகளை நிறைவேற்றிக் கொடுத்தல். ஒட்டுமொத்த தரவுத் தளத்தையும் தொடர்ச்சியாக இயங்கும் விதத்தில் பேணிச் சென்று, இச் சவால்மிகு பணியை மிகச் சரியாக நிறைவேற்றுதல்.

3. உயிர்மானக் கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் கருத்திட்டத்தின்இரண்டாம் கட்டமான கைவிரல் அடையாளங்களை உறுதிப்படுத்தலை, **2016** ஆம் வருடத்தில் முதற் காலாண்டில் பூர்த்தி செய்தல்.

### (2) காணாமல் போன அல்லது களவாடப்பட்ட கடவுச்சீட்டுகள் அலகு (SLTD)

காணாமல் போன மற்றும் களவாடப்பட்ட கடவுச்சீட்டுகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களினால் பெற்றுத் தரப்படுகின்ற தகவல்கள், மத்திய தகவல் பணியகத்தினால் அல்லது வெளிநாட்டுத் தூதரகங்களினால் நேரடியாக திணைக்களத்திற்கு தகவல்கள்/ விபரங்கள் அனுப்பீடு செய்யப்படும். அவற்றை புலனாய்வு செய்து, அவ்வாறான கடவுச்சீட்டுகளை மீண்டும் பாவிக்க

முடியாதவாறு செல்லுபடியற்றதாக்கி, சர்வதேச பொலிசுக்கு (**INTERPOL**)அறிவிக்கப்படும். இவ்வாறான கடவுச்சீட்டுகளைப் பாவித்து வேறு நபர்கள் வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், இவ்வாறான சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பதே (**SLTD**) முறைமையின் பிரதான பணியாகும்.

இதற்கமைய, **2016.01.01** தொடக்கம் **2016.12.31** வரையிலான காலப்பகுதியில் மத்திய தகவல் பணியகத்தினாலும்(**NCB**), வெளிநாட்டுத் தூதரகங்களினாலும் (**SLDM**)**8,303** கடவுச்சீட்டுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன், இவற்றுள்**5,663** கடவுச்சீட்டுகள் சர்வதேச பொலிஸ் தரவுத் தளத்திற்கு (**INTERPOL Data Base**) அனுப்பப்பட்டது.

### (3) ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு (IEMS)

குடிவரவு, குடியகல்வு தொடர்பான தகவல்களையும், புள்ளி விபரங்களையும் வழங்குவதற்காக ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு(**IEMS**) நிறுவப்பட்டது. இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் நேரடியாக இவ் அலகுடன் தொடர்பு கொள்வதுடன், தேவையான போது வீசா வழங்குவதற்கு முன் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகள் தொடர்பில் பிழையற்ற தன்மையை ஊர்ஜிதம் செய்து கொள்வதும் இவ் அலகு ஊடாகவாகும். **2016.01.01** தொடக்கம் **2016.12.31** வரையிலான காலப்பகுதியில் **1,932** விளக்க விசாரணைகளுக்கு எமது திணைக்களத்தின் இவ் அலகு ஊடாக பதில் வழங்கப்பட்டுள்ளது.

| | **தூதரகம்/ நிறுவனம்** | **அளிக்கப்பட்ட பதில்கள்** |
|---|---|---|
| 1. | ஜேர்மன் தூதுவராலயம் | 100 |
| 2. | பிரான்ஸ் தூதுவராலயம் | 86 |
| 3. | நோர்வே தூதுவராலயம் | 16 |
| 4. | சுவிட்சர்லாந்து தூதுவராலயம் | 336 |
| 5. | நெதர்லாந்து தூதுவராலயம் | 02 |
| 6. | அமெரிக்க தூதுவராலயம் | 69 |
| 7. | இத்தாலி தூதுவராலயம் | 09 |
| 8. | அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயம் | 137 |
| 9. | கனடா உயர்ஸ்தானிகராலயம் | 17 |
| 10. | பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் | 169 |
| 11. | தொகை மதிப்பீட்டு, புள்ளிவிபரத் திணைக்களம் | 07 |
| 12. | இலங்கை உயர்ஸ்தானிகராலயம், பிரித்தானியா (பிரித்தானியாவில் இருக்கும் இலங்கையர்களினால் கடவுச்சீட்டிற்காக விண்ணப்பிக்கும் போதும், விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் பிழையற்ற தன்மை உறுதி செய்யப்படுகின்றது) | 955 |
| 13. | இலங்கை மத்திய வங்கி நிதிப் புலனாய்வு அலகு | 23 |
| 14. | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | 04 |
| 15. | தாய்லாந்து தூதுவராலயம் | 02 |
| | **மொத்தம்** | **1,932** |

## 6. கணக்கீட்டுப் பிரிவு

பிரதம கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்கீட்டுப் பிரிவு இயங்குவதுடன், இப் பிரிவின் பணியாட் தொகுதி வருமாறு.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கணக்காளர் (வருமானம்) | 01 |
| 2. | கணக்காளர் (கொடுப்பனவு) | 01 |
| 3. | நிருவாக உத்தியோகத்தர் (நிதி) | 01 |
| 4. | வரவு - செலவுத் திட்ட உதவியாளர் | 01 |
| 5. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 |
| 6. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 20 |
| 7. | சிறாப்பர் | 36 |
| 8. | அலுவலக உதவியாளர் | 06 |

**நிதி முகாமைத்துவம்**


குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை சீராக மேற்கொள்வதே நிதிப் பிரிவின் பிரதான பணியாகும். வருமானம் ஈட்டும் திணைக்களம் என்ற வகையில், திணைக்களத்தின் வருமதிகளையும், செலவினங்களையும் முகாமை செய்தல், அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடக்கைகளை உரிய எல்லைக்குள் பேணிச் செல்லல், திறைசேரிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, இத் திணைக்களத்தின் வருடாந்த/ மாதாந்த அறிக்கைகளை (வருடாந்த வரவு - செலவு மதிப்பீடு, வருடாந்த வருமதி மதிப்பீடு, ஒதுக்கீட்டுக் கணக்கு, மாதாந்த கணக்குப் பொழிப்பு) தயாரித்து உரிய திகதிக்கு திறைசேரியிடம் சமர்ப்பித்தல், நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக நிதி நடவடிக்கைகளை வழிநடாத்தல் என்பவனவும் இப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளாகும்.

**வருமான இலக்கும் முன்னேற்றமும்**

**2016** ஆம் வருடத்திற்கான திணைக்களத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமான இலக்கு ரூ. **12,000.0** மில்லியனாக இருந்ததுடன், வருமானம் ஈட்டலின் வளர்ச்சியைக் கவனத்திற் கொண்டு, வருமான இலக்கு திருத்தப்பட்டு ரூ. **15,000.0**மில்லியன் வரை வருமான இலக்கை அதிகரிப்பதற்கு திறைசேரியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைய **2016** ஆம் வருடத்தில் திருத்திய மதிப்பீடு செய்யப்பட்ட வருமான இலக்கையும் தாண்டி **2016** ஆம் வருடத்தில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூ. **15,629.0**மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கமைய திருத்தப்பட்ட வருமான இலக்கிலும் பார்க்க ரூ. **629.0**மில்லியன் மேலதிக வருமானம் பதிவு செய்யப்பட்டுள்ளது. **2016** ஆம் வருடத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடன் நோக்கும் போது இது **24.2%** வீத அதிகரிப்பாகும். அதே போன்று **2015** ஆம் வருடத்திற்கான வருமானத்துடன் ஒப்பிடும் போது **2016** ஆம் வருடத்தில் **54.63%**வீத உயர் வருமான அதிகரிப்பைக் காட்டுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட அளவைத் தாண்டிய சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை காரணமாக இலத்திரனியல் பயண அங்கீகார ம்**(ETA)**வழங்குவதில் ஏற்பட்ட அதிகரிப்பும், இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் விநியோக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, வினைத்திறனுடன் முனெடுக்கப்பட்டதுமே இவ் வருமான அதிகரிப்பிற்கு பிரதான காரணிகளாகும்.

**2016 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் பிரதான வருமானம் ஈட்டல் மூலங்களூடாக ஈட்டப்பட்ட வருமானம் தொடர்பான விபரம்**

| | விபரம் | வருமானம் (ரூ.) |
|---|---|---|
| i. | கடவுச்சீட்டு விநியோகமும், திருத்தங்களும் | 2,602,701,825.83 |
| ii. | வெளிநாட்டுத் தூதரகங்களுடனான கடவுச்சீட்டு நடவடிக்கைகள் | 1,235,650,754.44 |
| iii. | துறைமுக நடவடிக்கைகள் | 65,763,000.00 |
| iv. | வீசா வழங்கலும், வீசா நீடித்தலும் | 1,041,235,093.60 |
| v. | இலத்திரனியல் பயண அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் (ETA) | 7,810,353,777.04 |
| vi. | குடியுரிமைப் பிரிவு | 2,873,651,440.00 |
| | **மொத்தம்** | **15,629,355,890.91** |





**வருமானப் பகுப்பாய்வு -2011 - 2016**


| | | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | கடவுச்சீட்டு வருமானம் | 2,064,103,335 | 2,226,238,950 | 2,092,488,502 | 2,133,548,087 | 2,104,719,692 | 2,602,701,827 |
| 2. | வெளிநாட்டுத் தூதரகங்களுடனான வருமானம் | 963,519,650 | 935,513,122 | 1,062,648,099 | 1,064,296,091 | 1,027,633,544 | 1,235,650,754 |
| 3. | துறைமுக நடவடிக்கைகள் | 35,885,000 | 49,219,000 | 71,397,000 | 72,488,000 | 74,065,000 | 65,763,000 |
| 4. | வீசா வழங்கலும், வீசா நீடித்தலும் | 595,177,260 | 696,896,744 | 751,379,693 | 800,098,823 | 917,471,394 | 1,041,235,094 |
| 5. | இலத்திரனியல் பயண அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல் (ETA) | - | 2,104,201,938 | 3,510,925,846 | 4,034,041,937 | 5,133,896,060 | 7,810,353,777 |
| 6. | குடியுரிமைப் பிரிவு | 105,972,500 | 169,181,850 | 35,253,730 | 46,422,010 | 850,008,800 | 2,873,651,440 |
| | **கூட்டு மொத்தம்** | **3,764,657,745** | **6,181,251,604** | **7,524,092,870** | **8,150,894,948** | **10,107,794,490** | **15,629,355,891** |

இலத்திரனியல் பயண அங்கீகார முறை **(ETA)**2012 ஆம் வருடத்திலிருந்து அமுல் செய்யப்பட்டது.

**2016 ஆம் வருடத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவும் (திருத்தப்பட்ட), உண்மையான செலவும்**

2016 ஆம் வருடத்திற்கான திணைக்களத்தின் செலவு மதிப்பீடு (திருத்தப்பட்ட) ரூ. 2,161.79 மில்லியனாகும். இதில் ரூ. 1,045.28 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும், ரூ. 1,116.47 மில்லியன் மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. 2016 ஆம் வருடத்தில் மொத்த உண்மையான செலவு ரூ. 1,980.41 மில்லியனாகும். இதில் ரூ. 1,037.91 மில்லியன் மீண்டெழும் செலவினங்களுக்காகவும், ரூ. 942.45 மில்லியன் மூலதனச் செலவினங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டது.




**நிதி முன்னேற்றம் (செலவினங்கள்) - 2016**

| விபரம் | 2016 திருத்தப்பட்ட மதிப்பீடு (ரூ.) | உண்மையான செலவு (ரூ.) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவுகள்** | **1,045,279,000** | **1,037,909,000** | **99%** |
| தனிநபர் வேதனாதிகள் | 558,066,000 | 557,185,000 | 100% |
| பிரயாணச் செலவுகள் | 27,850,000 | 25,657,000 | 92% |
| வழங்கல்கள் | 34,675,000 | 33,483,000 | 97% |
| பராமரிப்புச் செலவுகள் | 128,593,000 | 128,329,000 | 100% |
| ஒப்பந்தச் செலவுகள் | 284,576,000 | 281,745,000 | 99% |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 11,519,000 | 11,510,000 | 100% |
| **மூலதனச் செலவுகள்** | **1,116,469,000** | **942,454,000** | **84%** |
| மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும், மேம்படுத்தலும் | 45,855,000 | 32,710,000 | 71% |
| மூலதனச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளல் | 183,489,000 | 71,377,000 | 39%* |
| பயிற்சியும், திறன் விருத்தியும் | 4,000,000 | 1,237,000 | 31%** |
| ஏனைய முதலீடுகள் | 883,125,000 | 837,130,000 | 95% |

| கூட்டு மொத்தம் | 2,161,748,000 | 1,980,363,000 | 92% |
|---|---|---|---|

*மினுவாங்கொடை தடுப்பு நிலையத்தை அமைப்பதற்கு எதிராக எழுந்த மக்கள் எதிர்ப்பு காரணமாக இத் தடுப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்துவதற்கு நேர்ந்ததாலும், கட்டுநாயக்கா பதவிநிலை உத்தியோகத்தர் ஓய்வறையின் நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு முடியாமல் போனதின் காரணமாகவும் நிதி ஒதுக்கீடு சேமிக்கப்பட்டுள்ளது.

** 2016 ஆம் வருடத்தில் திணைக்களத்தை பத்தரமுல்லை "சுகுறுபாயா" புதிய கட்டிடத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதினால் திட்டமிடப்பட்டவாறு பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

## 7. பிரஜாவுரிமைப் பிரிவு

**1948** ஆம் ஆண்டின் **18** ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தினால் பிரஜாவுரிமைப் பிரிவிற்கு நியதிச்சட்டத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பிரஜாவுரிமைச் சட்டத்தை அமுல் செய்யும் நிறைவேற்றுத் தத்துவம் நேர்வரிசை அமைச்சின் செயலாளருக்கே உண்டு. பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளும், நிறைவேற்று நடைமுறைகளும், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டுத் தூதரகங்களூடாக கடவுச்சீட்டு விநியோக தொழிற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புபடுவதால், பிரஜாவுரிமைப் பிரிவு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது. இங்கு அமைச்சுச் செயலாளரின் நிறைவேற்றுத் தத்துவங்கள் உதவிச் செயலாளரொருவர் ஊடாக அமுல் செய்யப்படுவதுடன், அத் தத்துவங்கள் பிரஜாவுரிமைப் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளரொருவரூடாக நடைமுறைப்படுத்தப்படும். இப் பிரிவின் பணியாட் தொகுதி வருமாறு:

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவிக் கட்டுப்பாட்டாளர் | 02 |
| 2. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| 3. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 26 |
| 4. | அலுவலக உதவியாளர் | 05 |

**பணிகள்**

பிரஜாவுரிமைப் பிரிவினால் **1948** ஆம் ஆண்டின் **18** ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழுள்ள ஏற்பாடுகள் கீழ்க் காட்டப்பட்ட அடிப்படை விடயங்கள் ஊடாக அமுல் செய்யப்படுகின்றது.

- **சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையைப் பதிவு செய்தல்**

  ஒருவர் அல்லது இருவருமே இலங்கையர்களாக இருக்கும் பெற்றோருக்கு வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும்.

- **சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமையை மீள வழங்குதல்**

  வெளிநாடொன்றில் பிராஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக, இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்தோருக்கு மீண்டும் இலங்கைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொடுப்பதுடன் தொடர்புடைய பணிகள் இப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்றது.

- **சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமையை பதிவு செய்தல்**

தாய் அல்லது தந்தை இலங்கையர்களாக இருந்து சட்டத்தின் **5 (2)** ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்வதை **22** வயது வரை செய்யத் தவறிய ஒருவர் இப் பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும்.

- **சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையை மீள வழங்குதல்**

இலங்கைப் பிரஜையை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட வெளிநாட்டுப் பெண்களுக்கு இப் பிரிவின் கீழ் பிரஜாவுரிமை வழங்கப்படுகின்றது.

- **சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையை வழங்குதல்**

மிக முக்கிய சமூக சேவையாற்றிய அல்லது தொழிற்றுறை, கைத்தொழில் அல்லது விவசாயத்துறையில் நிபுணரொருவரான, இலங்கையில் சாதாரண பிரஜையொன்றாக வாழும் எதிர்பார்ப்புடன் இருக்கும் பிரஜாவுரிமைச் சட்டத்தின் **11, 12** ஆம் பிரிவுகளின் கீழ் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்ள உரித்தில்லாத ஒருவருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்கும் நடவடிக்கை இப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

- **சட்டத்தின் 13 (அ) ஆம் பிரிவின் கீழ் பிரஜாவுரிமையை வழங்குதல்**

**5** வருட செல்லுபடி வீசா அனுமதிப் பத்திரமொன்று அல்லது புறக்குறிப்பு வழங்கப்பட்டுள்ள மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்றுறையாளர்களுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வதிவிட வருகை தருவோர் திட்டமொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளொருவருக்கு பதிவின் மூலம் இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்குவதற்கு இப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- **சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்குதல்**

**19 (2)** ஆம் பிரிவின் மூலம் வெளிநாடுகளில் பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளல் காரணமாக, இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்த ஆளொருவர், அந் நாட்டின் பிரஜாவுரிமை இருக்கும் போதே இலங்கைப் பிரஜாவுரிமையை வழங்குதல் இப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கு, சட்டத்தின் **19 (3)** ஆம் பிரிவின் மூலம், வெளிநாடுகளில் வசித்தல் வீசாவில் இருப்போருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை இருக்கும் போதே குறித்த நாட்டிற்காக இரட்டைக் குடியுரிமையை வழங்குதல்.

- **சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளல்**

சட்டத்தின் **20 (1)** ஆம் பிரிவின் கீழ் **1948.11.15** ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிறந்த ஒருவராக இருப்பின் மற்றும் அத் திகதிக்கு பிறிதொரு நாட்டின் பிரஜையாக இருப்பின், **1952.12.31** ஆம் திகதி அல்லது அந்த ஆளுக்கு **22** வயதாகும் திகதி ஆகிய இரண்டில், பிந்தி வரக்கூடிய திகதியில் பிறிதொரு நாட்டின் குடியுரிமையை, அந் நாட்டு சட்டத்தின் பிரகாரம் கைவிட்டு, உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கும் பட்சத்தில் தவிர, இலங்கைப் பிரஜையாதல் முடிவுறுதல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சட்டத்தின் **20 (2)** ஆம் பிரிவின் கீழ் எவரேனும் ஆளொருவர் பரம்பரையாகவே இலங்கைப் பிரஜையாக இருக்கும் மற்றும் சட்டம் அமுலாவதனால், அந்த ஆளின் பிறப்பு இடம்பெற்ற போது


அல்லது அதன் பின் பிறிதொரு நாட்டின் பிரஜையாக இருப்பின், 1952.12.31 ஆம் திகதி அல்லது அவ்வாறு பிறிதொரு நாட்டின் பிரஜையாக இருந்த திகதியிலிருந்து ஒரு வருடம் கடந்து ஆரம்பமாகும் திகதி அல்லது அந்த ஆளுக்கு 22 வயதாகும் திகதி ஆகிய இரண்டில், பிந்தி வரக்கூடிய திகதியில் பிறிதொரு நாட்டின் குடியுரிமையை, அந் நாட்டு சட்டத்தின் பிரகாரம் கைவிட்டு, உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கும் பட்சத்தில் தவிர, இலங்கைப் பிரஜையாதல் முடிவுறுதல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.


சட்டத்தின் 20 (3) ஆம் பிரிவின் கீழ் பரம்பரையாகவே இலங்கைப் பிரஜையாக இருக்கும் ஆளொருவர் சுய விருப்பிலேயே பிறிதொரு நாட்டின் பிரஜையாக இருக்கும் பட்சத்தில், அந்த ஆளின் இலங்கைப் பிரஜாவுரிமை இரத்தாதல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சட்டத்தின் 20 (4) ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்காக மீண்டும் விண்ணப்பிக்கும் ஆளொருவரினால் தனது சுய வெளிநாட்டு பிராஜாவுரிமையை 03 மாத காலப்பகுதிக்குள் கைவிடாத பட்சத்தில் அந்த ஆளின் இலங்கைப் பிராஜாவுரிமை இரத்தாதல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

**பிரஜாவுரிமை சட்டத்தின் கீழ் 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரையிலான காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள்**

| | சட்டத்தின் உரிய பிரிவு | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் | அச்சிடப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சட்டத்தின் 5 (2) ஆம் பிரிவு | 10,254 | 8,276 |
| 2. | சட்டத்தின் 8 ஆம் பிரிவு | 34 | 12 |
| 3. | சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 105 | 51 |
| 4. | சட்டத்தின் 12 ஆம் பிரிவு | 15 | 08 |
| 5. | சட்டத்தின் 19(2), 19(3) ஆம் பிரிவுகள் | 14,722 | 17,544 |
| 6. | சட்டத்தின் 20 ஆம் பிரிவு | 108 | 108 |



**2016 ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள், வெற்றிகள் மற்றும் சவால்கள்**

- 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இரட்டைக் குடியுரிமையை வழங்கும் புதிய முறை 2015.03.23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய 2016 ஆம் வருடத்தில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் ( 05 வைபவங்கள்), "சுகுறுபாயா" கட்டிட கேட்போர்கூடத்திலும் இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ்களை விநியோகிக்கும் வைபவங்கள் நடாத்தப்பட்டு மேலே விபரிக்கப்பட்டவாறு இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டன.
- இலங்கை மகளிர் பணியகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, குடும்பக் கட்டமைப்பை வலுவூட்டும் வகையில் 2016.10.13 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற "லியசக்தி" எனப்படுகின்ற மங்கையர் சக்தி நடமாடும் சேவையில் பிராஜாவுரிமைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
- சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியமர்த்தல், இந்து சமய விவகாரங்கள் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை அகதிகளுக்கு பிரஜாவுரிமை வழங்கும் வகையில் 2016.11.25 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற நடமாடும் சேவையில் பிராஜாவுரிமைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## 8. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குகின்றது.

**பணியாட் தொகுதி - 2016**

| | பதவி/ சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |

**குறிக்கோள்**

- திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் பேணிச் செல்லப்படுகின்ற உள்ளக நிருவாக முறை தொடர்பில் தேடிப் பார்த்து, அந் நடவடிக்கைகளில் காணப்படுகின்ற தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காகவும், வெளிக் கொணர்வதற்காகவும் ஈடுபடுத்தப்படுகின்ற உள்ளக முறையான சோதனைகள் மற்றும் போதிய தன்மை என்பன தொடர்பில் தொடர்ச்சியான கணிப்பீடுகளையும், சுயாதீன மதிப்பீடுகளையும் நடாத்திச் செல்லல்.
- திணைக்களத்திற்கு விதிக்கப்பட்ட அல்லது திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் அடையப் பெற்ற முன்னேற்றங்களை நிச்சயிப்பதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும், முன்னேற்ற மீளாய்வுக் குழுவிற்கும் உதவியாக இருத்தல்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் இப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், திணைக்களத் தலைவருக்கும், முன்னேற்ற மீளாய்வுக் குழுவிற்கும் இடையில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுதல்.

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிகள்**

- ✓ தவறுகளையும் மோசடிகளையும் தடுப்பதற்காக திணைக்களத்தினுள் அமுல் செய்யப்படுகின்றஉள்ளக சோதனைகள் மற்றும் நிருவாக முறை என்பன, திட்ட அடிப்படையிலும்,

அதே போன்று உண்மையான செயற்பாடுகளின் அடிப்படையிலும் வெற்றியளித்துள்ளனவா? என்பதைத் தேடிப் பார்த்தல்.

- ✓ கணக்குகளினதும், பிற அறிக்கைகளினதும் நம்பகத் தன்மையை நிச்சயிப்பதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா? என்பதைத் தேடிப் பார்த்தல்.
- ✓ பணியாட் தொகுதியினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில், அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- ✓ எல்லா விதமான நட்டங்களிலிருந்தும் திணைக்களத்தின் ஆதனங்கள் எந்தளவு தூரத்திற்கு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைத் தேடிப் பார்த்தல்.
- ✓ தாபனவிதிக் கோவை, நிதிப் பிரமாணங்கள், பொது நிருவாகத்திற்குப் பொறுப்பான அமைச்சினாலும், திறைசேரியினாலும் காலத்திற்குக் காலம் விநியோகிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படுன்றனவா? என்பதைத் தேடிப் பார்த்தல்.
- ✓ வீண் விரயம், தேவையற்ற மற்றும் தேவைக்கு அதிகமாகச் செய்யப்படுகின்ற செலவுகளைத் தடுப்பதற்கும் அதே போன்று அவற்றைக் கண்டு பிடிப்பதற்கும் தெரிவு செய்யப்படுகின்ற உள்ளக நிருவாக முறைமை வெற்றியளித்துள்ளமை பற்றித் தேடிப் பார்த்தல்.
- ✓ திணைக்களத்தின் நிதி நடவடிக்கை முறை மற்றும் ஏதேனும் நிதிச் செலவுக்குக் காரணமாக அமையும் நடவடிக்கைகளைப் பரீட்சித்தல் மற்றும் திணைக்களத்தின் ஆதனங்கள், சொத்துக்கள் பாதுகாப்பாகவும் முறையாகவும், சிக்கனமாகவும் உபயோகிக்கப்படுகின்றனவா? என்பதைத் தேடிப் பார்த்தல்.
- ✓ நுட்பவியல் அல்லது கணக்கீட்டு கோணங்களிலிருந்து அப்பாற்பட்டு, முகாமைத்துவக் கோணத்திலிருந்து திணைக்களத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை பரீட்சித்தலும், அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தலும்.
- ✓ வேலைகள், திட்டங்கள், கருத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நேர அட்டவணைகள் எந்தளவு தூரம் இலக்குகளை அடைவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்.
- ✓ வேலைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை தாமதமாவதற்குக் காரணமாக அமைகின்ற பிரச்சினைகள், துறைகள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட தள நுண்ணாய்வுகளை நடாத்துதல்.
- ✓ அவ்வாறான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதில் பயன்படுத்தப்படுகின்ற நிருவாக நடவடிக்கைகளை மதிப்பீட்டிற்கும், மீளாய்விற்கும் உட்படுத்துதல்.

**2016ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தை பத்தரமுல்லை, "சுகுறுபாயா" புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்லும் பணிக்கு முனைப்புடனான பங்களிப்பைச் செலுத்துதல்.

**சவால்கள்**

போதிய பணியாட் தொகுதி இல்லாமை.
இணைக்கப்படுகின்ற பணியாட் தொகுதியினர் நீண்டகாலம் இப் பிரிவில் தரித்து நிற்காமை.

**2016 ஆம் வருடத்திற்கான இலக்குகளும், முன்னேற்றங்களும்**

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தை பத்தரமுல்லை, "சுகுறுபாயா" புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்லும் போது, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட பணிகளில் ஈடுபட்ட, வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிகளுள் சுமார் **65%** வீதத்தை முடிப்பதற்கு முடிந்தது.

## 9. நலனோம்புகை நடவடிக்கைகள்

**நலன்புரிச் சங்கத்தினால்2016ஆம் வருடத்தில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய பணிகள்**

சுமார் ஆயிரம் **(1,000)** திணைக்களப் பணியாளர்களை அங்கத்தவர்களாக் கொண்ட திணைக்களத்தின் குடிவரவு, குடியகல்வு நலன்புரிச் சங்கம், நலன்புரிச் சங்க அங்கத்தவர்களினதும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும், பொதுவாக முழுச் சமூகத்தினதும் நலன் கருதி, சமய, சமூக, கலாச்சார ரீதியில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்து வருகின்றது. இதனூடாக, உடல், உள ரீதியாக ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்கி, அவர்களின் வினைத்திறன் மிக்கதும், திருப்திகரமானதுமான சேவை ஊடாக பொது மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதே நோக்கமாகும்.

| | திகதி | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|
| 1. | 2016.01.01 | புதுவருட கொண்டாட்டமும், கடந்த வருடத்தில் வினைத்திறனுடன் சேவையாற்றிய திணைக்களப் பணியாட் தொகுதியினரைப்பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும். |
| 2. | 2016.01.01 | **2016** ஆம் வருடத்தில் பிறந்த நாள் பரிசாக சுவர்க் கடிகாரமொன்று வீதம் வழங்குதல். |
| 3. | 2016.01.08 | **2015** நத்தார் பண்டிகை சார்பில் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற *“විළිඳුහදටනත්තලක්”* என்றழைக்கப்படுகின்ற “பிஞ்சு உள்ளங்களில் நத்தார்” நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன், இந் நிகழ்ச்சியின் போது வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த **50** பிள்ளைகளுக்கு, பாடசாலை உபகரணங்கள், பாதணிகள், உணவுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இந் நிகழ்வின் போது இலங்கையின் முன்னணி இசைக் குழுவான நலின் பெரேரா தலைமையிலான “மேரியன்ஸ்” இசைக் குழுவினால் கறொல் கீதங்கள் பாடப்பட்டு மகிழ்விக்கப்பட்டது. |
| 4. | 2016.01.21 | *“ප්රතිභාප්රக என்”*றழைக்கப்படுகின்ற ***“திறமைக்கு பாராட்டு 2016”*** புலமைப் பரிசில் வழங்கும் வைபவம், கொழும்பு **05**, புத்த ஜயந்தி மந்திரய கேட்போர் கூடத்தில் மாண்புமிகு அமைச்சர் எஸ்.பி. நாவின்ன அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் **5** ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த **46** மாணவர்களுக்கும், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த **35** மாணவர்களுக்கும், உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகப் பிரவேசம் பெற்ற **24** மாணவர்களுக்கும், விசேட திறமைகளைக் காட்டிய **13** மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இதற்காக ரூ. **1,078,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 5. | 2016.07.30 | திணைக்கள ஊழியர்களுக்கிடையில் அணிக்கு ஆறுபேர் கொண்ட கிரிக்கட் போட்டித் தொடர், பத்தரமுல்லை, பெலவத்தை, புத்ததாச மைதானத்தில் நடாத்தப்பட்டது. இதில் பெண்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை கணினிப் பிரிவு கிரிக்கட் குழுவும், ஆண்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கிரிக்கட் குழுவும் கைப்பற்றிக் கொண்டன. |
| 6. | | கொழும்பிலும், கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வெள்ளப் பெருக்கு காரணமாக அனர்த்திற்குள்ளான மக்களுக்கு, திணைக்களப் பணியாட் தொகுதியின் உதவியுடன், உலர் உணவுப் பொருட்களையும், பிற அத்தியவசியப் பொருட்களையும், தயாரித்த உணவுகளையும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக கொலொன்னாவை, கடுவளை, ரணால, நவகமுவ, மல்வானை ஆகிய பிரதேசங்கள் |

| | | |
|---|---|---|
| | | தெரிவு செய்யப்பட்டு இப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. |
| 7. | | வெள்ளத்தினால் சேதமடைந்த திணைக்களப் பணியாட் தொகுதியினரான எமது அங்கத்தவர்களுக்கு, அவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் தன்மையைக் கவனத்தில் எடுத்து, நலன்புரிச் சங்கத்தின் நிதியத்திலிருந்து ரூ. **330,000/-** நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது. |
| 8. | 2016.07.01 | திணைக்களத்தை, பத்தரமுல்லை, "சுகுறுபாயா" கட்டிடத்தில் நிறுவும் போது, எமது திணைக்களப் பணியாட் தொகுதியினருக்கான உணவுச்சாலைக்காக **7** ஆம் மாடியில் இடவசதிகள் ஒதுக்கப்பட்டிருந்ததால், உணவுச்சாலையை மிகவும் அழகான, எழில் கொஞ்சும் விதத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்காக நலன்புரிச் சங்கத்தின் நிதியத்திலிருந்து சுமார் ரூ. **3,000,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 9. | 2016.07.01 | "சுகுறுபாயா" பிரதான கட்டிடத்தை அண்டியதாக உள்ள கட்டிடத்தில் உணவுச்சாலைக்காக உணவுகளைத் தயாரிப்பதற்காக ஒதுக்கித் தரப்பட்ட இடத்தை சுத்தம், சுகாதாரம் பேணப்பட்ட விதத்தில் அமைத்துக் கொள்ளும் வகையில், பரிபூரணமான சமையல் கூடமொன்று அமைக்கப்பட்டது. இதற்காக நலன்புரிச் சங்கத்தின் நிதியத்திலிருந்து சுமார் ரூ. **1,000,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 10. | 2016.07. | திணைக்களப் பணியாட் தொகுதியின் பாடல் திறமையை வெளிக் கொணரும் வகையில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் திணைக்களத்தின் உணவுச்சாலையில் பாடகர்களின் பாடல்களை ஒலிப்பதிவு செய்தல். |
| 11. | 2016.08.01 | திணைக்களப் பணியாட் தொகுதியினருக்கும், சேவைகளைப் பெற்றுக் கொள்ள வருகை தரும் சேவை பெறுனர்களுக்கும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், உணவுச்சாலை உட்பட திணைக்களத்தின் **7** மாடிகளிலும் நீர் வடிகட்டும் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்காக ரூ. **475,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 12. | 2016.08.25 | திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சேவை பெறுனர்கள் வருகை தரும் "பியச" என்றழைக்கப்படுகின்ற முன்னரங்கு அலுவலகக் கட்டிடத்தில் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பணிப்புரைகளுக்கு அமைய, புகைப்படச் சேவை, நிழற் பிரதி பண்ணும் சேவை, பொதி அனுப்புதல் சேவை, விண்ணபங்களை கணினி மூலம் நிரப்பும் சேவை ஆகிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டதுடன், பொது மக்களுக்கு தரித்திருப்பதற்கு வசதியாக **300** பேருக்கு உட்கார்வதற்கான இருக்கை வசதிகளும் செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக முன்னரங்கு அலுவலகக் கட்டிடத்தில் பற்றுச்சீட்டுகளை விநியோகிக்கும் **06** கருமபீடங்கள், வரவேற்பாளர் கருமபீடம், விண்ணபங்களை விநியோகிக்கும் கருமபீடம் முதலான கருமபீடங்களை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் இங்கு தொலைக்காட்சி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, சிற்றுண்டிச்சாலையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த எல்லா கருமபீடங்களும் ஒரே அளவில் அழகாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காக ரூ. **5,615,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 13. | 2016.08.29 | திணைக்களத்தை அலங்கரிப்பதற்காக பூச்சாடிகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| 14. | 2016.09. | திணைக்கள நலன்புரிச் சங்க அங்கத்தவர்களுக்கு கூடிய இடவசதிகளுடன் கூடியதாக, வாசிப்பதற்கான வசதிகளுடன் நூலகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்காக ரூ. **1,500,000/-** செலவு செய்யப்பட்டது. **2016** ஆம் வருடத்தில் நூலகத்திற்கு நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. **320,000/-** செலவு செய்யப்பட்டது. |
| 15. | 2016.12.22 | **2016** நத்தார் பண்டிகை சார்பில் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற |

| | | |
|---|---|---|
| | | *"බිළිඳුහදටනත්තලක්"* என்றழைக்கப்படுகின்ற "பிஞ்சு உள்ளங்களில் நத்தார்" நிகழ்ச்சி **2016** ஆம் வருடத்திலும் கோலாகலமாக நடாத்தப்பட்டதுடன், இந் நிகழ்ச்சியின் போது வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த **50** பிள்ளைகளுக்கு, பாடசாலை உபகரணங்கள், பாதணிகள், உணவுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. இந் நிகழ்வின் போது இலங்கையின் முன்னணி இசைக் குழுவான நலின் பெரேரா தலைமையிலான "மேரியன்ஸ்" இசைக் குழுவினால் கரொல் கீதங்கள் பாடப்பட்டு மகிழ்விக்கப்பட்டது. |
| **16.** | 2016.12.29 | **2016** ஆம் வருடத்தில் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்ளையும், வருடாந்த இடமாற்றங்களைப் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களையும் வாழ்த்தும் நிகழ்வு. |
| **17.** | 2016.12.30 | திணைக்களப் பணியாட் தொகுதியினரதும், அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் பங்குபற்றுதலுடன் வருட இறுதி களியாட்ட நிகழ்சி பத்தரமுல்லை அபேகம வளவில் நடாத்தப்பட்டது. |